விலை ரூபா: 15.00

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 06 ஞாயிற்றுக்கிழமை (21.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 002




# புலிகளின் ஆயுதக் கப்பல் முல்லைத்தீவில் மூழ்கடிப்பு

## கடற்படை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கே முல்லைத்தீவு கடற்பரப்பில் சனிக்கிழமை அதிகாலை ஆயுதங்களை ஏற்றி வந்ததாகத் தெரிவிக்கப்படும் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்றை கடற்படையினர் தாக்கி மூழ்கடித்துள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் கமடோர் மகேஷ் கருணாரட்ன தெரிவித்திருக்கிறார். இச்சம்பவத்தில் 20 விடுதலைப் புலிகள் வரையில் கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை கூறியுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலுள்ள பொதுமக்கள் 15 தடவைக்கு மேல் இடம்பெயர்வு

### மன்னார் ஆயர் கவலை

(மன்னார்)

வன்னியிலுள்ள 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்களில் பெரும்பாலானவர்கள் 15 தடவைக்கு மேலாக இடம்பெயர்ந்திருப்பதாக மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் தெரிவித்தார்.

வன்னி மோதல் சம்பவங்களினால் ஏற்பட்டு வருகின்ற இடம்பெயர்வுகள் மற்றும் எறிகணை வீச்சுக்கள், விமானத் தாக்குதல்கள் காரணமாக கர்ப்பிணித் தாய்மார்கள், கைக்குழந்தைகள் அதிர்ச்சிக்குள்ளாகிவரும் நிலையை தாம் நேரில் கண்டதாக அவர் குறிப்பிட்டார்.

தொடரும் உக்கிர மோதல்களால் வன்னிப்பிராந்திய மக்கள் நிவாரணங்களுக்காக நடைப்பிணங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரால் கைப்பற்றப்பட்ட 2 கிலோ மீற்றர் பிரதேசம் மீட்பு

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள இரணைமடு பகுதியில் படையினர் கைப்பற்றியிருந்த 2 கிலோ மீற்றர் முன்னரண் பகுதி அதிரடித் தாக்குதல் மூலம் மீட்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது,

முறிகண்டியில் உள்ள இரணைமடு பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் மூலம் இந்த முன்னரண் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை படையினரால் கைப்பற்றப்பட்ட முன்னரணே விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலால் படையினர் பலத்த இழப்புக்களுடன் அவர்கள் கைப்பற்றியிருந்த அரண் பகுதியை

(12ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலில் இரு பொதுமக்கள் பலி

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி பகுதியில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் இரு பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் படையினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி கடுமையான எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தர்மபுரம் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பரா வெளிச்சக் குண்டுகள் வீசி முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்

### இருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள், வாடிகள் மீது விமானப் படையினர் நடாத்திய குண்டுத் தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு கரையோரப் பகுதிகள் மீது நேற்று காலை 5.00 மணிக்கும் பின்னர் 5.35 மணிக்குமாக இரு தடவைகள் வந்த விமானங்கள் பரா வெளிச்சக் குண்டுகளை வீசி குண்டுத்தாக்குதலை நடத்தின.

இத் தாக்குதலில் கரையோரப் பகுதி மீன் வாடிகள் இரண்டும் படகுகள் இரண்டும் எரிந்து நாசமாகியுள்ளன. சங்கர் மற்றும் சுதர்சன் ஆகியோரின் மீன் வாடிகளே தாக்குதலுக்கு இலக்காகி எரிந்து நாசமாகின.

பொது

(12ஆம் பக்கம் பார்க்க)

## இழப்புகளை குறைப்பது குறித்து பாதுகாப்புச் சபையில் ஆராய்வு

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் கிளாலி களமுனைகளில் படைத்தரப்புக்கு சந்தித்த பாரிய இழப்புக்களை தொடர்ந்து படையினரின் இழப்புக்களை குறைப்பது எவ்வாறு என்பது தொடர்பாக பாதுகாப்புச்சபை கூடி ஆராய்ந்துள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்த வார தொடக்கத்தில் கிளிநொச்சி மற்றும் கிளாலி களமுனைகள் உட்பட பல களமுனைகளில் இராணுவம் சம நேரத்தில் மேற்கொண்ட நகர்வுகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் படைத்தரப்பு பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

(12ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி, யாழ்.களமுனைகளில் புலிகள் பல்குழல் தாக்குதல்

### டெய்லி மிரர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளாலி மற்றும் கிளிநொச்சி களமுனைகளில் கடந்த செவ்வாய்க்கிழமை படையினர் மேற்கொண்ட பலமுனை நகர்வுகளுக்கு எதிரான தாக்குதல்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் பல்குழல் வெடிகணைச் செலுத்திகளைப் பயன்படுத்தியுள்ளனர் என கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லி மிரர் ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த நாளேட்டில் வெளி வந்த முக்கிய பகுதிகள் வருமாறு,

படையினரின் மூத்த அதிகாரிகள் பலர் கடந்த திங்கட்கிழமை இரவு பாரிய தாக்குதல் ஒன்றுக்காக வேகமாக செயலாற்றிக் கொண்டிருந்தனர்.

மறுநாள்காலை தாக்குதல் தொடங்கவிருந்தது. அதிகாலை 4 மணியளவில் 53,55, 57 மற்றும் 58-வது படையணிகள் அதன் கட்டளை அதிகாரிகளின் வழி நடத்தலில் களமிறக்கப்பட்டன.

57 மற்றும் 58-வது படையணிகள் இணைந்து

(12ஆம் பக்கம் .பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலம்புரியின் 9ஆம் ஆண்டு நிகழ்வு



வலம்புரியின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழா நேற்றைய தினம் வலம்புரிப் பணிமனையில் இடம்பெற்றது. நிகழ்வில் நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம், பிரதம ஒப்புநோக்குநர் க.லோகநாதன், உதவி ஆசிரியர் ச.ஓங்காரரூபி, செய்தி ஆசிரியர் க.சதீபன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும்,

நல்லூர்க் கோட்டகல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம், ஆசிரியர் நி.சரவணபவன், மருத்துவ பீட மாணவன் இ.முரளிதரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வலம்புரிக் குடும்பத்தினரையும் படங்களில் காணலாம்.

## மானிய உர விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்ட மானியமாக 2080 மெற்றிக்தொன் உரம் நெற்பயிருக்கு விநியோகிக்கப்பட்டு தற்போது 2ஆம்கட்ட மானியமாக 1120 மெற்றிக் தொன் உரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இம்மானிய உரத்தை விற்பனை செய்தல்,வாங்குதல், விற்பனைக்கு ஒத்துழைப்பு வழங்குதல் ஆகியன சட்டரீதியாக தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான நடவடிக்கை களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார். (இ)

## விரும்பத்தகாத நிகழ்வுகளை தவிர்க்கக் கோருகிறார் ராமதாஸ்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் நலன் கருதி அனைத்துத் தரப்பினரும் இனி விருப்பத்தகாத நிகழ்வுகளை தவிர்க்க வேண்டுமென பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தேசிய அளவிலுள்ள அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறும் முயற்சியை பா.ம.க மேற்கொண்டு வருகிறது.

இலங்கைத் தமிழர்களின் நலன்கருதி அனைத்துத் தரப்பினரும் இனி விரும்பத்தகாத நிகழ்வுகளை தவிர்க்க வேண்டுமெனவும் அனைத்துநடவடிக்கைகளையும் மறுபரிசீலனை செய்து நல்லெண்ண அடிப்படையில் அவற்றைக் கைவிட முன்வரவேண்டும் என்றார் ராமதாஸ். (ச-5)


## முதலாம் ஆண்டு ஆத்மா சாந்திப் பிரார்த்தனை



## அமரர் தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து சமய விவகார அமைச்சர், யாழ்.மாவட்ட மற்றும் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்)

அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

தொடர்ந்து ஆன்மீகப் பேருரையும், நினைவுப் பேருரைகளும் இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களும், முதியோர்களுக்கு உடுபுடைவைகளும் வழங்கப்படும்.

விசேட அன்னதான வைபவமும் இடம்பெறும்.

*அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

வல்லிபுரம்,
புலோலி.

மடாதிபதி
பெரியாழ்வார் ஆச்சிரமம்

(C-1867)


## கடலுக்கு அடியில் கேபிள்கள் சேதம் இலங்கையில் இன்டர்நெட் பாதிப்பு

சுயஸ் கால்வாய் வழியாக மத்திய தரைக் கடலின் அடியால் செல்லும் கேபிள்களில் சேதம் ஏற்பட்டிருப்பதால் ஆசிய,ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இன்டர்நெட் சேவைகள்வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் தொலைத்தொடர்பு சேவைகளும் பாதிப்படைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. கடலுக்கடியில் செல்லும் கேபிள்களில் 4 கேபிள்கள் சேதமடைந்திருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.இந்த சேதத்தினால் இந்தியாவில் 65 சதவீதமான இன்டர்நெட் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் இன்டர்நெட் மூலமான சேவைகள் வழங்கி வரும் இந்திய நிறுவனங்கள் சிலவற்றுக்கு தற்காலிகமாக விடுமுறை வழங்கப்பட்டிருப்பதாகவும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைவிட இலங்கை, சிங்கப்பூர், மலேசியா,சவூதிஅரேபியா, எகிப்து,தைவான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலும் இன்டர்நெட் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கேபிள்கள் சேதமடைந்ததற்கான காரணம் கண்டறியப்படாதபோதும் கேபிள்கள் சேதமடைந்ததற்கு சில நிமிடங்களுக்கு முன்பு மால்டா அருகே நில நடுக்கம் ஏற்பட்டதாக கண்டறியப்பட்டுள்ளது. (ச-5)

## மகேஸ்வரன். எம்.பியின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை

முன்னாள் இந்து சமய விவகார அமைச்சர், யாழ்.மாவட்ட மற்றும் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் தியாகராசா மகேஸ்வரனின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்குபுலோலிஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

தொடர்ந்து ஆன்மீகப் பேருரையும், நினைவுப் பேருரைகளும் இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களும்,முதியோர்களுக்கு உடு புடைவைகளும் வழங்கப்படும். இந்நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.வரதீஸ்வரன் கலந்து கொள்கிறார். (ச)

## யாழ்தேவியில் 11 பேர் கைது

வவுனியாவில் இருந்து கொழும்பை நோக்கி சென்று கொண்டிருந்த யாழ்தேவி புகையிரதத்தில் பயணித்த 11 தமிழர்கள் கம்பஹாவில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.இந்த சம்பவம் கடந்தபுதன்கிழமைமாலைஇடம்பெற்றுள்ளது.

இவர்கள் கொழும்புக்கு பயணிப்பதற்கான காரணத்தை உரிய முறையில் தெரிவிக்காமை காரணமாகவே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை கம்பஹாவில் பணியாற்றும் தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த புதன்கிழமையன்று கைது செய்யப்பட்டுள்ளார். (எ-5)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு ' பக்தி நெறி' என்னும் பொருள் பற்றி சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ தியாக சோமாஸ் கந்தராஜா குருக்கள் அவர்கள் (அதிபர் குடத்தனை அ.மி.த.க.பாடசாலை) ஆன்மீக சொற் பொழிவாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து 11.30 மணிக்கு முன்னைநாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தி.மகேஸ்வரன் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு தின விசேட நிகழ்வுகள் நடைபெறும். இந்நிகழ்வில் அமரர் தி.மகேஸ்வரன் அவர்களது நினைவுப் பேருரைகள் கல்விமான்கள், அறிஞர்கள் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

அதனைத் தொடர்ந்து வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெரியாழ்வார் ஆச்சிரம முதியோர் இல்லத்திலுள்ள முதியோர்கள் ஆகியோருக்கு அன்பளிப்புக்கள் வழங்கப்படும். (ஓ-35)

## யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு 'இள விஞ்ஞானி' விருது வழங்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பௌதிகவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி புண்ணியமூர்த்தி ரவிராஜன், கடந்த சனிக்கிழமை (டிசம்பர் 13) நிகழ்ந்த 2008 இற்கான விஞ்ஞான தொழில்நுட்ப தேசிய விருதுகள் வழங்கும் வைபவத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவினால் 'இள விஞ்ஞானி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் மேற்கொண்ட விஞ்ஞான ஆய்வுகள், எழுதிய விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றுக்காக தேசிய விஞ்ஞான மன்றமும் நெதர்லாந்து எல்ஸ்வியர் பதிப்பக மும் இணைந்து இவரை இவ்விருதிற்காகத் தேர்ந்தெடுத்துள்ளன. இவர் 2006 இல் உபவேந்தர்களும், இயக்குநர்களும் கொண்ட சபையினரால் 'பௌதிக விஞ்ஞானத் திற்கான அதிசிறந்த இள விஞ்ஞானி ஆய்வாளர்' எனும் விருது வழங்கி கௌரவிக் கப்பட்டவராவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மாதகல் புனித தோமஸ் பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் பெற்று, விஞ்ஞான மாணி, முதுமாணி, கலாநிதிப் பட்டங்களை முறையே யாழ்ப்பாணம், பெரதேனியா, இலண்டன் பல்கலைக்கழகங்களில் பெற்றுள்ளார். (ஓ)



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் யாழ்ப்பாணம் மக்கோஸ்ற் கற்றர் சூப்பர் மார்க்கெற்றில் ஆரம்பமான காப்புறுதி வழங்கும் நிகழ்வில் முதலாவது வாடிக்கையாளரான ஜெ.பார்த்தீபனுக்கு ஆயுள் காப்புறுதி விற்பனை முகாமையாளர் அரியநாயகம் ரஞ்சித் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:கோபி)

## திருவாசக முற்றோதல்

நல்லூர் சிவன் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை5 மணிமுதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. அத்துடன் திருக்கோவையாரும் பாடப் பெறும். அடியார்கள் கலந்து பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றனர். (ஓ)

## கலந்துரையாடல்

யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கான 2009 ஆம் ஆண்டு செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை9மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரால் நடத்தப்படவுள்ளது.

எனவே சகல ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## உள்ளூராட்சி வார நிறைவுநாள் விழா

கோப்பாய் லயன்ஸ் கழகத்தினரின் அனுசரணையுடன் நடைபெறும் வலி.கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் விழா 24 ஆம்திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் த.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வர்.

அத்துடன் முன்பள்ளி சிறார்களின் கலைநிகழ்வுகள், வாழ்வகம் குழுவினரின் இன்னிசை விருந்து, குருதி நன்கொடையாளிகள், 25 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய முன்பள்ளி ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ஓ-6)

## விநாயகர் சஷ்டித் திருவிழா

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய விநாயகர் சஷ்டித்திருவிழா இம்மாதம் 13 ஆம்திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 21 தினங்கள் நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வில் தினமும் மாலை 2 மணி முதல் அபிஷேக ஆராதனையுடன் சுவாமி உள்வீதி உலாவருதலும், பெருங்கதைப் படிப்பும் இடம்பெறும்.

ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக் கிழமை108 கலச அபிஷேகம் இடம்பெறும். (ஓ)

◀◀ ◀◀ ▶▶

இருபாலை அருள்மிகு கற்பகப்பிள்ளையார் ஆலய விநாயகர் விரத இலட்சார்ச்சனை இம்மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகி ஜனவரி முதலாம் திகதி வரை நடைபெற்று வருகின்றது.

தினமும் மாலை 3.30 மணிக்கு அபிஷேகமும் மாலை 4மணிக்கு பஞ்சமுக விநாயகருக்கு விசேட பூஜையுடன் பஞ்சமுக அர்ச்சனையும் பிள்ளையார் கதை படிப்பும் நடைபெறும். (ஓ-136)

## வாரம் ஒரு தகவல்

## விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை

என்ன சேர்? உங்களுக்கு அறுபதாம் கல்யாணம் நடந்ததாமே? உங்களைப் பார்த்தால் எனக்குப் பெறாமையாக இருக் கிறது.

ஏன் அப்படிச் சொல்றீங்க?

குடும்பத்தில் ஒரு சின்ன சண்டை சச்சரவு கூட இல்லாமல் இவ்வளவு தூரம் காலம் தள்ளியிருக்கிறீர்களே! எப்படி சேர் உங்களால் முடிந்தது?

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைதான் அந்த இரகசியம்!

''தவளையும் தேரையும் கூட விட்டுக்கொடுத்து வாழ்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள்?''

அப்படியா?

ஆமாம்! தவளைகள் சாதாரணமாக கறையானையும் சிறிய பூச்சிகளையும் மட்டுமே சாப்பிடுமாம். தேரைகள் இவற்றையும் சிறிய வண்டுகளையும் உண்ணுமாம்.

ஆனால் வடகிழக்குப் பருவமழைக்குப் பின் தவளையும் தேரையும் ஒரே இடத்தில் சேர்ந்து வசிக்கும் சமயத்தில் தேரைகள் வண்டுகளை மட்டும் தான் சாப்பிடுமாம். கறையானையும் பூச்சியினங்களையும் அந்தச் சமயத்தில் தேரை சாப்பிடுவதில் லையாம்.

ஏனென்றால் தவளைகளுக்காக அதையெல்லாம் விட்டுக் கொடுத்து விடுமாம்.

பார்த்தீர்களா? விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அவற்றி டமும் இருக்கிறது. அதுசரி, சேர்! நீங்கள் எதை விட்டுக் கொடுத்தீர்கள்?

என்னுடைய கௌரவத்தை!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

21.12.2008
(மார்கழி 6, ஞாயிற்றுக்கிழமை)
அத்தம் முற்பகல் 9.18 மணிவரை
நவமி முற்பகல் 9.36 மணிவரை
இராகுகாலம் 4.55- 6.25 மணிவரை
சுபநேரம் 9.25-10 .55 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | ஜனவசியம், உறவினர் உதவி, எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை. |
| இடபம் | விதண்டாவாதம், குடும்பக்கவலை, பணவிரயம், முயற்சிதாமதம். |
| மிதுனம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, புதிய முயற்சி, ஆரோக்கியம். |
| கடகம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர்வெறுப்பு, சயனசுகக்குறைவு |
| சிங்கம் | எடுத்த காரியம் கைகூடும், சகோதரர் உதவி, மனமகிழ்ச்சி, புகழ். |
| கன்னி | நல்லசெய்தி, அதிக பிரயாசை, புதிய திருப்பம், அதிகாரம். |
| துலாம் | ரோகநிலை, பிரயாணம், கட்டுப்பாடு, சரீரப்பிரயாசை. |
| விருச்சிகம் | அபகீர்த்தி, ஆரோக்கியக்குறைவு, காரிய தடங்கல், வாகன பயம். |
| தனுசு | குடும்ப மகிழ்ச்சி, சென்ற இடத்தில் செல்வாக்கு, தெய்வசிந்தை, பொருள் சேர்க்கை. |
| மகரம் | நல்ல முயற்சி, அதிகாரம், போசன சுகம், உடல் நலம். |
| கும்பம் | தாழ்ந்த சுபர்வம், பணக்குறைவு, முயற்சி தாமதம், பூர்வ புண்ணிய கருமம். |
| மீனம் | மாதாசுகம், சுபகாரியச் செலவு, மனச்சோர்வு, தெய்வசிந்தை. |

வளவன்

## சூறாவளி

வலிகளை மட்டும் வார்த்துச்
சொல்கிறது
சுனாமி
சூறாவளி
யுத்தமும் கூட
எப்போதும் காவு கொள்ளப்பட்டு
விடுகிறது
எம் உயிர்கள்
வலிகளிலான மீழுகையின்
போதெல்லாம்
மீண்டும் மீண்டும்
எம் மீட்சிகளை சிதைத்து
விட்டுச் செல்கிறது
ஒரு சுனாமி
ஒரு சூறாவளி
யுத்தம்
இவை எமக்கொன்றும் புதியவை யல்ல
வலிகளை மட்டும் வார்த்துச்
சொல்லினும்
மீண்டும் மீண்டும் முயற்சிப்போம்
எமக்கான மீளுகைக்காய்


ஸ்ரீராம்

## படைப்புக்களை

''நிஷா'' இழப்புக்களை
தோல்விகளைத் தந்தாலும்
முயற்சிக்கான வித்தை
அதனால் அழித்துவிட முடியாது!
அழிவுப் பேரலைகள் தந்த
சோகங்கள் அடங்கிப் போகமுன்
மீண்டும் வடிவங்களை மாற்றி
அழிவு 'நிஷா' புயல் வடிவில்
மானிட வர்க்கம் காணாத துயர்களா?
மனம் சளைக்காது மாற்றத்திற்கான
பாதைகளாக்கிக் கொள்வோம்
மாறிவிடும் எம் உறுதியைக் கண்டு
வேண்டிடுவோம் இறைவனை
உன் சோதனைகளுக்கான
எல்லைகளை வகுத்துக்கொள்
உன் படைப்புக்களை நீயே வருத்தாதே!

இர்ம ஜெயபாலன், கொக்குவில்

# திரை விமர்சனம்





# பொம்மலாட்டம்

கலைக்காக தன் வாழ்க்கையை அ பணித்து ாண்டு வாழும் ஒரு கலைஞனின் வாழ்க்கையில் ஏற்படும் ந து...கெட்ட ... அத்த னையையும் கலந்து கட்டி உருவாகியிருக்கும் படம்தான் ெ ம்மலாட்டம்.

பொதுவாக இது மாதிரி கதையில் ஒரு நடிகரின் வாழ்க்ன கப்பின்னணி யை காட்ட முயற்சிப்பார்கள். ஆனால் இதில் ஒரு சினிமா இயக்குநரின் வாழ்க்கைப் பின்னணியை துணிந்து காட்ட முற்பட்டு, அதற்காக ஹிந்தி நடிகர் நானா படேகரை தேர்வு செய்திருக்கும் இயக்குனர் பாரதி ராஜாவின் துணிச்சலைப் பாராட்டியே தீர வேண்டும்.

கதைப்படி மிகவும் கோபக்காரரான சினிமா இயக்குநர் இரானா, தன் படைப்பு ஒன்றிற்காக தன் கதைக்கு பொருத்தமான கதாநாயகியை தேடுகிறார். ஒருவழியாக அவர் விரும்பியபடி கிடைக்கும் கதாநாயகியை பத்திரிகை, தொலைக்காட்சி என ஊடகங்கள் எல்லாவற்றிலும் இருந்து மறைத்து முழுப் படப்பிடிப்பையும் நடத்தி முடிக்கிறார். ஒரு முறை தன்னையும், தன் நாயகியையும் துரத்தும் பத்திரிகை ஊடகங்களிடம் இருந்து தன் நாயகியை காபந்து செய்ய அசுர வேகத்தில் காரில் செல்லும் இரானா, அதேவேகத்தில் ஒரு மலை முகட்டில் இருந்து காரை நாயகியுடன் தள்ளிவிட்டு வெடிக்கச் செய்து, தான் மட்டும் தப்பித்துக் கொண்டு விபத்து நாடகம் ஆடுகிறார். ஆனால் உண்மையைக் கண்டுபிடிக்கும் பொலிஸ், வழக்கை சிபிஐக்கு மாற்றுகிறது.

இரானா தன் கதாநாயகியைக் கொலை செய்ய வேண்டிய அவசியம் என்ன? எனும் விசாரணை யில் இறங்கும் சிபிஐ அதிகாரி அர்ஜுன், அதே இயக்குனர் இரானாவின் ஷூட்டிங் ஸ்பொட்டில் மேலும் 2 கொலைகள் நடந்திருப்பது கண்டு மூன்று கொலைகளையும் டைரக்டர் இரானாதான் செய்திருப்பதாக முடிவுக்கு வருகிறார். அர்ஜுன் எடுத்த முடிவு சரிதானா? டைரக்டர் இரானா மூன்று கொலைகளைச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? அவர்தான் நிஜமான குற்றவாளியா? என்று பல கேள்விகளுக்கு பொம்மலாட்டம் க்ளைமாக்ஸ் யாருமே எதிர்பாராத தில் சொல்கிறது.



அந்தப் பதிலில் இயக்குநர் பாரதிராஜாவிடம் இன்னும் சரக்கு தீர்ந்துவிடவில்லை... எனும் கேட்கப்படாத கேள்விக்கான பதிலும் அடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இயக்குநர் இரானாவாகவே ஹிந்தி நடிகர் நானே படேகர் வாழ்ந்திருக்கிறார். அவரது கோபம், மௌனம், மகிழ்ச்சி இதை யெல்லாம் தவிர்த்து, செய்வினை திருந்தச் செய் கனும் பர்பெஷன் ஓர்க் எல்லாம் மிகப் பிரமாதமாக பிரேம் டு பிரேம் காட்சி படுத்தப்பட்டுள்ளது பாராட்டுதலுக்குரியது. தன் மனைவி ரஞ்சிதா ஷூட்டிங் ஸ்பொட்டில் தேடி வந்து தன்னை அவமானப் படுத்தம் போது அமைதி காத்தும், அவர் கிளம்பிச் சென்றதும் ரெடி, ஸ்டாட், ஆக்ஷன் என இயக்கத்தில் இறங்கிவிடும் ஒரு சீன் போதும், நானாவின் நடிப்பு நயத்தை சொல்ல...! அர்ஜுன் ஆக்ஷனை மறந்து இந்தப் படத்தில் அமைதி புயலாக, துப்பறியும் சிபிஐ அதிகாரியாக சபாஷ் போட வைக்கிறார். அர்ஜுனின் காதலி அலைஸ் இயக்குநர் இரானாவின அபிமானியாக காஜல் அகர்வால் கண்களாலேயே நடிக்க முற்பட்டு அதில் சில இடங்களில் ஜெயித்தும் இருக்கிறார். நடிகையாக. அதுவும் இயக்குநர் இரானாவின் தேடல்களுக்கு ஏற்ற நடிகையாக படம் முழுக்க பவனி வந்து, க்ளைமாக்ஸில் அட அவனா (ளா) இவன்? என கேட்கத்தூண்டும். ருக்குமணி விஜயகுமாருக்கு நிச்சயம் ஏராள விருதுகள். இவர்கள் தவிர இரானாவின் டார்ச்சர் மனைவியாக ரஞ்சிதா, ஊர் பெரிய மனிதர் மணிவண்ணன். அவரது ரவுசு மச்சான் விவேக், பைனான்சியரின் வாரிசு புதுமுகம் என சகலரும் தங்கள் பங்கை சரியாக செய்துள்ளனர் என்றாலும், அதில் விவேக், மணிவண்ணன் பாத்திரங்கள் கதைக்கு தேவைதானா? எனும் கருத்தை ஏற்படுத்துகிறது. பாரதிராஜாவின் கண்கள் என போற்றப்படும் பி. கண்ணனின் ஒளிப்பதிவு வழக்கம்போல இதிலும் பிரமாதம். ஹிமேஷ் ரேஷமிய்யாவின் பின்னணி இசையும், சாபு சிரிலின் கலையும் பலம்!



சபாஷ்

தனது யதார்த்த திரைப்படங்கள் மூலம் எக்கச்சக்க விடயங்களை படம் பிடித்துக் காட்டிய இயக்குநர் பாரதிராஜா, இந்த படத்தில் தனது யதாரத்த வாழ்க்கையையும் காட்ட முற்பட்டிருக்கிறாரோ? என சந்தேகம் எழும் அளவிற்கு இயல்பாக இருக்கிறது பொம்மலாட்டம்.

பொதுவாக சினிமாவைப் படம் பிடிக்கும் சினிமாக்கள் தமிழ் சினிமாவில் ஓடுவதில்லை எனும் லொஜிக்கை பொம்மலாட்டம் உடைத்தால் கொண்டாட்டம்

## நமீதா படத்தில் சிம்பு



தமிழ் சினிமா ரசிகர்கள் மத்தியில் தனக்கென தனிஇடம் பிடித்திருக்கும் நடிகை நமீதா, தற்போது ஜெகன் மோகினி படத்தில் நடித்து வருகிறார்.

இந்தப் படத்தை தொடர்ந்து அவர் 'ஜெகதலப்பிரதாபன்' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இந்த படத்தை எடிட்டர் ஆண்டனி இயக்குகிறார். படத்தின் ஹீரோ ஜெயராம். யூகிசேதுவும் முக்கியமான வேடத்தில் நடிக்கிறார். படத்தின் இன்னொரு ஹைலைட் நடிகர் சிம்பு கெஸ்ட் ரோலில் நடிக்கவிருப்பதுதான். தனது நண்பன் ஆண்டனி கேட்டுக் கொண்டதற்கிணங்க ஜெகதலப் பிரதாபனில் கெஸ்ட்ரோலில் நடிக்க சிம்பு ஒப்புக் கொண்டிருக்கிறாராம்.

சத்யம் படத்திற்கு பின் விஷால் நடிக்கும் புதிய திரைப்படத்திற்கு 'தோரணை' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

இப்படத்திற்கு கதை. திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார் சபா அய்யப்பன். இவர் மௌலி, விஜி மற்றும் பூபதி பாண்டியன் ஆகியோ ரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர். இப் படத்தில் விஷாலுக்கு ஜோடியாக நடிப்பவர் ஸ்ரேயா. இவர்களுடன் பிரகாஷ்ராஜ், கிஷோர், பாண்டியராஜன், எம்.எல். பாஸ்கர், ஸ்ரீமன், சந்தானம், லிவிங்ஸ்டன், சண்முகரா ஜன், மயில்சாமி, பரவைமுனியம்மா, சுமன் ஷெட்டி, ஆர்யன் உள்ளிட்ட பலரும் நடிக்கிறார்கள். ப்ரியன் ஒளிப்பதிவை கையாள, மணி ஷர்மா இசையமைக்கிறார்.

இப்படத்திற்காக காரைக் குடியில் 'வெடி வெடி சரவெடி... அடி அடி அதிரடி...' என்ற பாடல் படமாக்கப்பட்டது. இப்பாடல் காட்சி யில் ஏராளமான நாட்டுப்புறக் கலைஞர்கள் பங்குபற்றினர். நடிகை மீனாட்சி இந்தப் பாடலுக்கு நடனமாடியுள்ளார். தமிழில் தோரணை என்ற பெயரிலும், தெலுங்கில் 'பிஸ்தா' என்ற பெயரிலும் ஒரே தருணத் தில் உருவாகும் இந்தத் திரைப் படத்தை ஜி.கே. பிலிம் கார்பரேசன் சார்பில்



தோரணை படத்தில் விஷால்

## ஸ்னிக்தா மீது நடிகர் சங்கத்தில் புகார் கொடுக்க முடிவு



அஞ்சாதே படத்தில் இடம் பெற்ற கத்தாழ கண்ணாலே... பாடலில் குத்தாட்டம் போட்டு ரசிகர்களை ஆட்டம் போட வைத்த நடிகை ஸ்னிக்தா.

நந்தலாலா படத்தில் கதாநாயகி ஆனார். இதனைத் தொடர்ந்து ஷக்தி சிதம்பரத்தின் ராஜாதிராஜா படத்தில் ஐந்து நாயகிகளில் ஒருவராக நடித்து வருகிறார். சமீபத்தில் இந்த படத்தின் சூட்டிங் மும்பையில் நடந்தது. சூட்டிங் முடிந்ததும் கிளம்பியவருக்கு விமானத்தில் பிஸினஸ் கிளாஸ் டிக்கெற் புக்கிங் செய்யவில்லையாம்.

இதனால் கோபமடைந்த ஸ்னிக்தா, நான் கேட்டது கிடைக்கவில்லையெனில் சூட்டிங் இரத்தாகி விடும் என்று மிரட்டினாராம். அம்மணியின் ஆட்டம் படப்பிடப்புக் குழுவினரிடையே எரிச்சலை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து அவர் மீது நடிகர் சங்கத்தில் புகார் செய்ய முடிவு செய்திருக்கிறார்களாம்.

## சிவகிரி நாயகனாக நடிக்கும் சிவகிரி

நாட்டுக்குள் ஊடுருவியிருக்கும் தீவிரவாதிகளையும், பயங்கரவாதிகளையும் அழிப்பதற்காக அவதாரமெடுத்து வரும் ஒரு அதிரடி பொலிஸ் அதிகாரியின் கதைதான் 'சிவகிரி' படத்தின் கதை.

இதில் அதிரடி போலீஸ் அதிகாரி சிவகிரி வேடத்தில் சிவகிரிஎன்ற புதிய நடிகர் அறிமுகமாகிறார். இவருக்கு ஜோடியாக மலையாள நடிகை ருக்ஷனா, மலேசியா நடிகை சாந்தினி, கவர்ச்சி நடிகை ரிஷா ஆகிய மூவரும் நடிக்கின்றனர்.

இப்படத்திற்காக ஐந்து பாடல்களை மலேசியா, சிங்கப்பூரில் படமாக்கியுள்ளனர். பாடல் காட்சி மட்டுமின்றி வில்லன் கோஷ்டியுடன் சிவகிரி மோதும் காட்சிகளையும் அங்கேயே படமாக்கியுள்ளனர். சிவகிரி ருக்ஷனா, சந்தினி, ரிஷா ஆகியோரும், குகன் சக்ரவர்த்தி, வெ.ஆ. மூர்த்தி, பானு ஆனந்த், வாசுவிக்ரம் உள்ளிட்ட பலரும் நடித்து வருகின்றனர். ஷிவாஜி என்பவரது இயக்கத்தில் சிவகிரி படத்திற்கு ஒளிப்பதிவு செய்கிறார் ராஜாமணி.

அராபின் யூசுப்பின் இசையில் கோவை பெண் தொழிலதிபர் மாயா தனது ஐஸ்காம் இல்லூஷன் இன்ஜினீயரிங் நிறுவனம் சார்பில் இப்படத்தை தயாரிக்கிறார்.

## சினேகா இப்ப ரொம்ப பிஸி



புன்னகை இளவரசி என போற்றப்படும் நடிகை சினேகா தற்போது மீண்டும் படு பிஸியாகி விட் டார்.

மம்முட்டியுடன் அறுவடை, சிம்புவுடன் சிலம்பாட்டம், வினய்யுடன் நூற்றுக்கு நூறு, சுந்தர்சி யுடன் முரட்டுகாளை பிரசன்னாவுடன் அச்ச முண்டு அச்ச முண்டு படங்களில் சினேகா விஜயசாந்தியை அதிரடி நாயகியாக்கிய வைஜெயந்தி IPS ன் ரீமேக் படமான பவானி என்று ஒரு டசின் படங்களுக்கு மேல் நடித்துக் கொண்டிருக் கிறார். இந்தப் படங்களில் எல்லாம் சினேகா வித்தியாச மான கெட்டப்புகளில் தோன்றி நடித்து வருகி றார். அதே நேரத்தில் சினேகாவுக்கு மாப்பிள்ளை தேடும் படலமும் தொடங்கிவிட்டது என்கிறார்கள் கோடம்பாக் கத்துக்காரர்கள்.

## மீண்டும் சிலிம் ஆக சிம்ரன் முயற்சி



ஒரு காலத்தில் தமிழ் சினிமா ரசிகர்களின் கனவுக் கன்னியாக திகழ்ந்து வந்த சிம்ரன், திருமணத்துக்கு பினனர் சில ஆண்டுகள் நடிப்புக்கு முழுக்கு போட்டிருந்தார்.

தற்போது மீண்டும் தமிழ் சினிமாவில் கால் பதித்துள்ள இவர் அக்கா, அம்மா, அத்தை கேரக்டர்களில் தொடர்ந்து நடித்து வருகிறார். இதனால் தமிழ் திரையுலகில் சமீபகால மாக அவரை ஆன்ட்டி என அழைக்க ஆரம்பித்துள்ள னராம். இது சிம்ரனுக்கு பயங்கர வருத்தத்தைக் கொடுத் துள்ளது. எப்படியாவது இந்த இமேஜை மாற்ற வேண்டும் என நினைத்து சிம், கடுமையான உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு ஆகியவற்றை மேற்கொண்டு மீண்டும் சிலிம் ஆகும் முயற்சியில் இறங்கியிருக்கிறாராம்.

## த்ரிஷாவின் புது சபதம்




த்ரிஷா, கதாநாயகி யாக ஆவதற்கு முன் சென்னை அழகி ஆன சமயத்தில் சில படங்க ளில் ரிச்கோளாக வந்து போனது தெரியும் அல்லவா?

அந்த நேரத்தில் ஒரு டி.வி. சீரியலிலும் நடித் தார். அம்மணி அவ்வாறு நடித்த சீரியலை இப் போது டி.வி.யில். மறு ஒளி பரப்பு செய்கிறார் கள். இதற்கான அறிவிப்புகள் அந்த டி.வி.யில் அடிக் கடி ஒளிபரப்பாக, அதுவும் த்ரிஷா முதன் முதலாக நடித்த சின்னத்திரை தொடர் என தினமும் விளம்பரப் படுத்துவது கண்டு செம கடுப்பில் இருக்கிறா ராம் த்ரிஷா. எப்படியும் அந்த தொடரை வராமல் தடுத்து விட வேண்டும் என்று சட்ட ரீதியாகவும், சட்டத்திற்கு புறம் பாகவும் காய் நகர்த்தி வருகிறதாம் த்ரிஷா தரப்பு.

# மங்கள நாதஸ்வர இசையில் சீவாளியின் சிறப்பு

தமிழ் மக்களின் பண்பாடு கலாசாரங்களுடன் பண்டுதொட்டு இணைந்து சிறப்பைக் கொடுப்பது மங்கள இசையாகும். தமிழருக்கே உரியதான தமிழிசைக் கருவிகளுள் தனித்துவப் பெருமையுடையதாக



விளங்குவது நாதஸ்வரமாகும். இந்த மங்கள இசையை நாதஸ்வரத்திலே வரவழைப்பதற்குப் பயன்படுவது ஒருவகை நாணல் புற் தட்டையாகும்.

நாணல் புல்லில் பேநாணல், சம்பு நாணல், கல்நாணல் எனப் பல உண்டு. இதில் பேநாணல் பட்டினத்தடிகளுக்கு முத்தி கொடுத்ததாகக் கூறப்படுவது.பேநாணற் புல்லைச் சுவைத்து இறைவன் மீது பக்தி ததும்பும் பாடல்களைப் பாடி திருவெற்றி யூரிற் பட்டினத்தடிகள் முத்தியடைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

கல்நாணல் என்பதும் மூங்கிற் குழாய் போன்று மெலிந்து நீண்டு ஊதும்போது ஓசையை எழுப்பும். சிறுவர்கள் விழாக் காலங் களில் இதனை ஊதி இசை எழுப்பி மகிழ்வார்கள்.

அடுத்தபடியாக சம்பு நாணல் என்பது நாணல் புல்லிற் சிறப்பாக இசை ஒலி எழுப்பக் கூடியதும் நாதஸ்வர இசையை இரசனைக்குரியதாக்கும் அபூர்வமானதுமாகும். சம்புநாவல் நாதஸ்வரத்திற்கு இனிய ஒலியை எழுப்பும் சீவாளிகளைத் தயாரிப்பதற்கு உதவுகின்றது. நாதஸ்வரத்திற் பொருத்தப்படும் சம்புநாவற் சப்பைகளே செவிக்கு இனிய ஓசை ஒலியினை வெளிப்படுத்துவதாயுள்ளது.

நாதஸ்வரத்தில் 2கட்டை, $2\frac{1}{2}$ கட்டை, $\frac{2}{3}$ கட்டை என்ற சுதியளவில் வாசிப்பதற்கு ஏற்ற முறையில் நாணற் புற் சீவாளிகள் தயாரிப்பார்கள். நாதஸ்வர இசைக்கே மூலாதாரமான விசேட சிறப்பம்சம் இந்தச் சீவாளிக்கு உண்டு. அதாவது நாதஸ்வரத்திற்கு தேவையான மற்று யாவற்றையும் யந்திரங்களின் உதவியுடன் உருவாக்கலாம். ஆனால் இந்த சீவாளியை மட்டும் அதிற் கைதேர்ந்தவர்களாலேயே பக்குவப்படுத்தப்பட்டு தயாரிக்கமுடியும்.

வேறு உலோகப் பொருட்களாலோ, பிளாஸ்ரிக் வகைகளாலோ தயாரிப்பது முடியாததாகும்.சிறிய வடிவம் கொண்ட இந்தச் சீவாளிகளைப் பல பல பக்குவங்க ளைச் செய்து தான் உருவாக்குகின்றார்கள். நாணல் புல்லின் எல்லாப் பாகத்திலும் இதனைச் செய்யமுடியாது.

நாணலின் நடுத் தண்டுகளான தடித் பகுதிகளைப் வெட்டிப் பண்படுத்திப் பக்குவமாகவும் நுணுக்கமாகவும் சீவாளிகள் உருவாக்கப் படுகின்றன. உடம்பிற்கு உயிர் போல நாதஸ்வரத்திற்கும் இந்தச் சீவாளியே உயிர்ப்புத் தருகின்றது.

நாதஸ்வர இசையின் போது இந்தச் சீவாளியில் ஏற்படும் அடைப்பைத் தடங்கல் களை எடுப்பதற்கு குச்சில் எனும் ஊசி போன்ற கருவி பயன்படுத்தப்படும் இந்தக் குச்சில் ஊசிகள் யானைத் தந்தம், மாட்டு எலும்பு போன்றவற்றிற் செய்யப் படும்.

ஒரு நாதஸ்வரத்தை நாம் நன்கு பார்ப்போமானால் அதிற் பல சீவாளிகளும், அவற்றின் அடைப்பை நீக்கும் குச்சில்களும் தொங்குவது காணலாம்.


இனிய மங்கள இசையைத் தந்து எம்மை மயக்கும் நாதஸ்வரம் எனும் இசைக் கருவியானது ஆர்ச்சா எனப்படும் ஒரு மரத்தினாலே மேலே ஒடுக்கமாகவும் கீழே படுத்தும்,விரிந்து வட்டமாகவும் அமைந்திருக்கும் குழாய் வடிவமான இதில் உடற் பாகத்தில் அங்குலத்திற்கு ஒன்றாக ஏழு வாரங்கள் இடப்பட்டிருக்கும். இத் துவாரங்களில் விரல்களைப் பதித்தே ஏழு சுரங்களும் எழுப்பப்படுகின்றன.

## நீர்வைமணி

நன்கு நாதஸ்வர இசையைப் பயின்றவர்கள் ஏழு சுரங்களையும் தம் விரல் நுனிகளைப் பதித்து சீவாளி மூலம் வெளிப்படுத்தும் அபூர்வமான இனிய மங்களகர மான இசையானது நாதஸ்வரக் குழாயின் அடியில் விரிந்த பாகத்தின் மூலம் வெளி வந்து கேட்போரை மெய்மறக்கச் செய்கின் றது.


தமிழ் மக்களின் பாரம்பரிய, மங்களகரமான நாதஸ்வர இசைக்கலை நிலைத்து என்றும் தமிழர் தம் பண்பினை மேலோங்கச் செய்ய வேண்டும்.

இசையில் மயங்காத பேர்களு ண்டோ!





யாழ்.சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை வாகனத்தில் பயன்படுத்தப்படும் அத்தியாவசிய உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களை மெடிக்கல் ரிம்ஸ் இன்டர்நஷனல் நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பிரதிநிதி, சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ்.மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சனிடம் கையளிப்பதையும், அருகில் மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.ஈழநேசன் நிற்பதையும், வழங்கப்பட்ட மருத்துவ உபகரணங்களின் ஒரு தொகுதியையும் படங்களில் காணலாம்.



சொண்ட்நிறுவனம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் 'நிஷா' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 403 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பயனாளி ஒருவர் பொருட்களைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

மலரும் புத்தாண்டில் கல்வியைத் தொடர இருக்கும் மாணவ மாணவிகளை மனமார வாழ்த்தி அன்புடன் அழைக்கிறது

- அதிக தரம்
- நியாயமான விலை
- கண்கவர் நிறங்களில் அழகிய அட்டைப் படங்களுடன்
- மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
- அன்பளிப்பு பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் இன்னும் பல...

ரிச்சார்ட் பாடசாலை, அலுவலக உபகரணங்கள் விற்பனை நிலையம்

யாழ். ஏக விநியோகஸ்தர்:

KAJAN ENTERPRISE
RAMALINGAM ROAD, MUDAMAVADY,
THIRUNALVELY.

பொருட்களை வாங்கி மாதாந்த சீட்டிழுப்பில் இணைந்து பரிசில்களை வெல்லுங்கள்

T.P.:021 222 6678, 0777 550886,
0774055154

Richard®
Quality Stationery

C2016

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்

10

01

1966



விண்ணில்

01

01

2008

# அமரர் திரு. தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்துசமய விவகார அமைச்சர், யாழ். மாவட்ட மற்றும்
கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

தங்கமான எங்கள் ஆசை அப்பா
கம்பீரமாய் சிவனைக் கும்பிடச் சென்றீரே
கும்பிட்டு வரும்போது கூற்றுவன் கொடிய
துவக்கால் சுட்டனனே! சின்னக்குழந்தைகளென
சிந்திக்காது பச்சைக்குழந்தைகளிடத்து பரிதாபமில்லாது
பிஞ்சுக் குழந்தைகள் பேதலித்து நிற்க
சின்ன வயதிலேயே அப்பாவைச் சாகடித்தனரே!
கொடிது ! கொடிது ! அப்பா இந்தக் கொடுமை
அன்று முதலாக அப்பாவைக் காணவில்லை
அன்பான பேச்சை நாங்கள் கேட்கவில்லை
கொஞ்சி மகிழவில்லை கூடிச் செல்லவில்லை
பெற்று வளர்த்த அப்பா பெயரிட்ட அப்பா
வளர்த்த அருமை அப்பா வரிசையிட்ட
நேச அப்பா தொடர்ந்து பேணி வளர்க்காது
பெரியவர் ஆக்காது பெருமை பார்க்காது
ஐந்து வயதிலேயே அகன்ற மர்மம் என்ன?
சின்ன வயதிலேயே சென்ற மர்மம் என்ன?
பிஞ்சு வயதிலேயே பிரிந்த மர்மம் என்ன?
இச் செயல் கொடிது ! கொடிது! அப்பா
அதனிலும் கொடிது ! அப்பா இன்று
பச்சைப் பாலகனாய் பக்குவமாய் உமை நினைத்து
பன்னிரண்டு மாதங்கள் முட்டுக்கால் குந்தி
அறுகெடுத்துப் பூசை செய்யும் அர்ச்சுனனாய்
வில்வம் எடுத்துப் பூசை செய்யும் விசயனாய்
பூ எடுத்து பூசை செய்யும் புண்ணியனாய்
அறுசுவை உண்டி அன்பாய் படைத்து
பத்துவித பட்சணங்கள் பாங்காய் படைத்து
எள்ளும் தண்ணீரும் கடலில் இறைத்து
என்னப்பா பூசனையால் உங்களை ஈசனாக்கி
இதயம் நெக்குருக இப் பணிகள் தொடர்வதென்ன?
நீங்கள் அள்ளி அணைத்து அன்பு சொரியும்
பிரணவன் பாடுகிறேன் பேசாது இருப்பதென்ன?
கேளாது இருப்பது என்ன?வாராது இருப்பது என்ன?
கொடிது ! கொடிது! அப்பா நேச அப்பா
பித்தன் சிவனுடன் பேதமறக் கலந்தீரோ
அன்பன் சிவன் பேரருளில் அழகாய் கலந்தீரே
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பா பூசனையால் ஈசனாக்கி போற்றுகின்றேன்.

பிரணவன் மகேஸ்வரன்

அமரர் தி.மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று 21ஆம் திகதி காலை 9.30 மணிக்கு காரைநகர் ஈழத்து சிதம்பர அறப்பணி நிலைய மண்டபத்தில் பஜனை நினைவுப்பேருரை நூல் வெளியீடு என்பன இடம்பெறவுள்ளன. இந் நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி. விஜயகலா மகேஸ்வரன்
குழந்தைகள், குடும்பத்தினர்.

276, பலாலி வீதி, கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

சி-1863

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

2007ஆம் ஆண்டு நடைபெற்ற முறைசாராக் கல்வி தொழிற்திறன் பயிற்சி நெறிகளைக் கற்று இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய (அறிமுறை, செயன்முறை) மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 28 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சான்றிழ்களைப் பெற உள்ள அனைவரும் தவறாது சமுகம் தந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக்கொள்கின்றார். (இ)

## மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளை துப்புரவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட எல்லைக்குள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் கிணறுகளை இறைத்துக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளது.

எனவே கிணறு இறைக்கவேண்டிய தேவையுள்ள பொதுமக்கள் தலைமையகத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

## மாலைநேர திருப்பலி

ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை திருப்பலி நடைபெறவுள்ளது.

காலை திருப்பலி, எழுவைதீவு புனித தோமையார் திருவிழா திருப்பலி நடப்பதால் ஊர்காவற்றுறையில் மாலை திருப்பலி நடைபெறும் என பங்குத் தந்தையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-72)

## வலி.கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

(புத்தூர்)

வலி.கிழக்கு பிரதேச சபையினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரை (கனிஷ்ட பிரிவு)**

வ.திவாகரன்- கோப்பாய் வித்தி., க.நவநிதி- கோப்பாய் வித்தி., ந.ரேணிகா-புனித தெரேசா மகளிர் கல்லூரி.

**கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)**

இ.வேணுஜா-உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி., அ.அருள்பிரியா-புனித தெரேசா மகளிர் கல்லூரி, ப.மதுஷா-ஆவரங்கால் மகாஜனா கல்லூரி.

**கட்டுரை (உயர் பிரிவு)**

ச.சுகன்யா-புனித தெரேசா மகளிர் கல்லூரி, நி.தனஞ்செனி-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, வை.ரம்மிகா-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**பேச்சு (கனிஷ்ட பிரிவு)**

வே.கிறிஷ்ணவி-புனித தெரேசா மகளிர் கல்லூரி, ந.அஜந்தா-புனித தெரேசா மகளிர் கல்லூரி, சி.சங்கீதா- புனித தெரேசா மகளிர் கல்லூரி.

**பேச்சு (சிரேஷ்ட பிரிவு)**

பு.நிக்ஷலா-புனித தெரேசா மகளிர் கல்லூரி, தே.நிவேக்கா-புனித தெரேசா மகளிர் கல்லூரி, இ.இதயதீபா-நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை.

**பேச்சு (உயர் பிரிவு)**

கு.தாட்ஷாயிணி-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, ம.கெலன்சோபியா- புனித தெரேசா மகளிர் கல்லூரி, சி.சாமந்தி-புனித தெரேசா மகளிர் கல்லூரி. (இ)

## காணி அன்பளிப்பு

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு அதன் வளர்ச்சி கருதி அதே இடத்தினைச் சேர்ந்த ஏரம்பு கணபதிப்பிள்ளை என்பவர் தமது குடியிருப்புக் காணியில் இருந்து பாடசாலை மைதானத்துடன் இணைந்த காணியினை அன்பளிப்புச் செய்துள்ளார். (ஓ-29)

## குப்பைகளை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கோண்டாவில்)

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதி மற்றும் ஆடியபாதம் வீதிகளில் பொதுமக்களினால் குவிக்கப்பட்டு வரும் குப்பைகளால் பயணிகள் பெரும் சிரமப்படுகின்றனர்.

அண்மையில் பெய்த கனமழையால் அழிவடைந்த மரங்கள் மற்றும் வேறு பல கழிவுகளும் தெருவோரங்களில் குவியல்களாகக் காணப்படுகின்றன.

தொடரும் மழை காரணமாக குப்பைகளிலிருந்து துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய்களும், நுளம்புகளின் பெருக்கமும் அதிகரிக்கலாம் என்பதனால் பிரதேச சபையினர் வீதியோரக் குப்பைகளை அகற்றி போக்குவரத்திற்கு உதவவேண்டும் எனப் பொதுமக்கள் கோரியுள்ளனர். (ஓ-36)

## மெல்கிப்சனின் கிறிஸ்துவின் பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் கல்விசார்/கலைத்துவம் சார் படக் காட்சித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு மெல் கிப்சனின் "கிறிஸ்துவின் பாடுகள் (The Passion of the Christ)" திரைப்படம் அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக் காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறும்.

ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இம்மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய கல்வி ஆண்டில் நடைமுறைப் படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## ஒளிவிழா

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்விவலய ஊழியர் நலன்புரிக் கழகம் நடத்தும் ஒளிவிழா நாளை திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு சாவகச்சேரி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஓ-29)


## ஸ்ரீ லங்கா இன்சூரன்சின் மாபெரும் 2009 ஆம் ஆண்டிற்கான வேலை வாய்ப்புத்திட்டம்

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

50 பில்லியன் ரூபாயைவிட அதிக சொத்துக்களை நிர்வகிக்கும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் இலங்கையின் மிகப் பழமைவாய்ந்த விசாலமான மற்றும் மிகுந்த வலிமையான காப்புறுதி நிறுவனமாகும். உலகப் புகழ்பெற்ற தரப்படுத்தும் நிறுவனமான பிட்ச் ரேட்டிங்ஸ் லண்டன் நிறுவனத்திடம் இருந்து நிதியியல் வலிமைவாய்ந்த தேசிய காப்புறுதி நிறுவனம் AA- (lka) என்றும் தேசிய நீண்டகால கடனுக்கான A+(lka) என்னும் தரப்படுத்தல்களை வென்ற முதல் காப்புறுதி நிறவனமாகும். அத்துடன் யாழ்மாவட்டத்தில் 40 வருட கால சேவையினை மக்களுக்கு வழங்கி வருகின்றது.

மேற்படி எமது நிறுவனமானது யாழ்.மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆயுள் காப்புறுதி பிரிவிற்கு பின்வரும் பதவிகளிற்கு துடிப்புமிக்க இளைஞர் யுவதிகளிடமிருந்து பின்வரும் பதவிகளிற்கு விண்ணப்பங்களை கோருகின்றது.

### பதவி –01 வெற்றிடங்கள் 05 ☞ விற்பனை அதிகாரி-ஆயுள் (Sales Executive Life)

மேற்படி பதவிக்கான தகைமைகள்
1.க.பொ.த. உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தி
2.காப்புறுதித் துறையில் குறைந்தது. 02 வருடம் பணியாற்றிய அனுபவம்
3.வயதெல்லை 18-30 வரை
4.இலங்கைக் காப்புறுதி நிறுவகத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் (IBSL Exam) சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை

மேற்படி பதவிக்கான அனுகூலங்கள்
1.அடிப்படைச் சம்பளம் (Basic Salary)
2.ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி (EPF, ETF)
3.மோட்டார் வாகன வசதி (Car/Motorbike Facility)
4.தொலைபேசி வசதி (Mobile phone)
5.வருடப்பங்குலாபம் (Bonus)

### பதவி – 02 ☞ குழுத்தலைவர் (Group Leader)

மேற்படி பதவிக்கான தகைமைகள்
01.க.பொ.த. சாதாரண தரத்தில் 06 பாடங்கள் சித்தி
02.வயதெல்லை 18-30 வரை
03.இலங்கைக் காப்புறுதி நிறுவகத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் (IBSL Exam) சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை
04.காப்புறுதி துறையில் குறைந்தது 01 வருடம் பணியாற்றிய அனுபவம்

மேற்படி பதவிக்கான அனுகூலங்கள்
1.எல்லையற்ற, நிரந்தர வருமானம்
2.மோட்டார் வாகன வசதி
3.வருடாந்த பங்கு லாபம்
4.மேலதிக படிகள்

### பதவி – 03 ☞ காப்புறுதி ஆலோசகர் (Insurance Advisor)

01. பகுதி நேரம் (Part Time)
02.முழு நேரம் (Full Time)

மேற்படி பதவிக்கான தகைமைகள்
1.க.பொ.த. சாதாரண தரத்தில் 06 பாடங்கள் சித்தி
2.வயதெல்லை 18-55 வரை
3.அரசு மற்றும் தனியார் துறையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்
4.2008இல் க.பொ.த. உயர்தர பரீட்சையினை நிறைவு செய்தவர்களும் மேற்படி பதவி 3 இற்கு விண்ணப்பிக்கலாம்

மேற்படி பதவிக்கான அனுகூலங்கள்
5.எல்லையற்ற நிரந்தர வருமானம்
6.மோட்டார் வாகன வசதி
7.வருடாந்த பங்கு லாபம்
8.மேலதிக படிகள்

மேற்படி பதவிகளிற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1/01/2009 விண்ணப்ப மேலுறையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி:
Sales Manager-Life,
Sri Lanka Insurance,
No.12 1st Floor Weerasingham Hall,
Jaffna.

C1863

# கிளிநொச்சி, கிளாலி போர் முனைகளில் புலிகளின் பதிலடி

கிளிநொச்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற அரசின் முயற்சியில் வன்னியில் இடம்பெற்றுவரும் பலமுனை இராணுவ நடவடிக்கையில் பயிற்சி பெற்ற பல படையணிகள் ஈடுபட்டுள்ளன.

வன்னிக் களமுனைகளில் கடந்த வாரம் இடம்பெற்ற கடும் மோதல்களில் புதிய படையணி ஒன்று உருவாக்கப்பட்டு (தரைப்படை- V)களம் இறக்கப்பட்டது. வன்னிப்படை நடவடிக்கையில் தற்போது 8 படையணிகள் களத்தில் உள்ளன.

கேணல் அத்துல ஹலகம்மகே ,லெப் கேணல் பிரியங்க பெர்னாண்டோ மற்றும் லெப் கேணல் அபேரட்ண ஆகியோர் புதிதாக பிரிக்கேடியார்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.


இவ்வாறு கிளிநொச்சி நோக்கிய வன்னிப்படை நடவடிக்கையில் பெரும் எடுப்பில் முன்னேறும் இராணுவத்திற்கு கடந்த 16ஆம் திகதி விடுதலைப்புலிகளின் தாக்குதல் பேரிழப்பை ஏற்படுத்தியிருந்தது.

வன்னிப்படை நடவடிக்கையில் இராணுவத்திற்கு ஏற்பட்ட இரண்டாவது பெரும் இரத்த களரியாக கடந்த 16ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தெற்கு கிளாலி மற்றும் மேற்கு கிளிநொச்சி ஊடாகவும் பெரும் படையெடுப்பை மேற்கொண்டது.

இதில் 53ஆவது கடந்த 2000ஆம் ஆண்டு இழந்த யாழ் .குடாநாட்டின் நுழைவாயில்களாகவுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவைக் கைப்பற்றுவதற்காக மூன்று சிறப்புப்படையணிகள் கடந்த 16ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு கிளாலி கள முனையில் படை நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.எ.சந்திரசிறியின் கட்டளையில் 53ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் கமால் குணரட்ணவின் நேரடி வழிநடத்தலில் இந்த கிளாலி களமுனை படையெடுப்பு இடம்பெற்றது.

முன்னேறிய சிறப்புப்படையணிகளை நோக்கி விடுதலைப்புலிகள் மோட்டார் எறிகணை,கண்ணிவெடிகள்,சினைப்பர் தாக்குதல்கள் என கடும் முறியடிப்புத்தாக்குதலை மேற்கொண்டனர். இதில் முன்னேறிய படையினருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியதுடன் முன்னேறும் முயற்சியும் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது.



9 மணி நேர தீவிர மோதலின் பின் முன்னேறியு பண்டயணிகள் காலை 10.30 மணிக்கு தமது பழைய நிலைக்கு நகர்ந்தன.

கடந்த இருவருடங்களாக முகமாலை, கிளாலி களமுனைகளில் முன்னேறிய படையினருக்கு பல இழப்புகள் ஏற்பட்டதே தவிர அம் முயற்சி இன்றுவரை வெற்றியளிக்கவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முன்னேற்ற படை நடவடிக்கையில் இராணுவத்தில் 40 படையினர் கொல்லப்பட்டதுடன் 160 பேர் படுகாயமடைந்துள்ளதாக அறிவித்திருந்த விடுதலைப்புலிகள் பெரும் அளவு ஆயுதங்களையும் இராணுவத்தின் 8 சடலங்களையும் மீட்டதாக தெரிவித்தனர்.

எனினும் விடுதலைப்புலிகளின் இவ் அறிவிப்பை மறுத்திருந்த இராணுவம் தமது தரப்பில் 25 படையினர் கொல்லப்பட்டதாகவும் 10 படையினர் காணாமல் போயுள்ளதாகவும் 160 படையினருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதாகவும் கூறியிருந்தது.

போர்முனைகளின் படைநடவடிக்கைகள் எனக்கூறுவதில் மிகையாகாது. கடந்த 14ஆம் திகதி இப்பத்தியில் நாம் குறிப்பிட்டது போன்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான பாதுகாப்பு உயர் மட்டக்குழுவின் பலாலி விஜயம் கிளாலி ஊடான படை நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக அமைந்தது.

இந்த பாதுகாப்பு உயர் மட்டக்குழுவின் விஜயத்தின் ஒரு சில நாட்களில் கடந்த செவ்வாய்க்கிழமை 53ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் கமால் குணரட்ணவின் வழிநடத்தலில் இரண்டு படையணிகள் (53-1 மற்றும் 53 -2) கிளாலி ஊடாகவும் 57 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸின் வழிநடத்தலில் 3 படையணிகள் (57-1,57-2மற்றும் 57-3) மலயாளபுரம்,முறிகண்டி,புளிக்குளம் மற்றும் இரணைமடு ஆகிய கள முனைகள்

எனினும் யாழ். குடாநாட்டில் குறித்த தினத்தில் இராணுவத்தின் உலங்கு வானூர்தி பல தடவை பலாலிக்கும் முகமாலை களமுனைக்கும் இடையே பறப்பில் ஈடுபட்டதுடன் ஏ-9 வீதி பலாலி வீதியுடனான வாகனத்தொடரணியின் மூலம் குறித்த வீதிகள் பல தடவை பல மணி நேரம் மூடப்பட்டிருந்தது.

அத்துடன் படையினர் குறித்த தினத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியை நோக்கி ஆட்லறிமற்றும் பல்குழல் தாக்குதலை நடத்திய அதேவேளை விடுதலைப்புலிகளால் ஏவப்பட்ட ஆட்லறிகள் இராணுவத்தினரின் உசன் மிருசுவில் பகுதி தளங்களுக்கு அண்மையாக வீழ்ந்தது.



வெடித்ததாகக்கூறப்படுகிறது.

அதேவேளை செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு இராணுவத்தின் 57ஆவது மற்றும் 58ஆவது படையணிகள் பரந்தன், கிளிநொச்சி பகுதிகள் மீது ஆட்லறி மற்றும் பல்குழல் தாக்குதல்களை மேற்கொண்டது.

குறித்த தினத்தில் வன்னிக்கள முனைகளில் இடம்பெற்ற பல முனைத்தாக்குதலில் 130 படையினர் கொல்லப்பட்டதாகவும் 300 படையினர் படு காயமடைந்ததாகவும் 36 படையினரின் சடலங்களை தாம் மீட்டுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இதில் 28 சடலங்கள் கிளிநொச்சி களமுனைகளில் மீட்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட படையினரின் சடலங்களின் படங்களை வெளியிட்டிருந்த



விடுதலைப்புலிகளின் படப்பிடிப்புப் பிரிவு அதில் ஒரு சடலம் சிறுவர் படையினது என படத்துடன் இணையத்தளங்கள் ஊடாக சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டினர்.

இம்மோதல்களில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் கிளாலியில் இருந்து பலாலிக்கும் கிளிநொச்சி களமுனையில் இருந்து மன்னார் மற்றும் வவுனியா கூட்டுப்படைத்தளங்களுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் வழமை போன்று தரை வழிபாதையூடாக கொல்லப்பட்டவர்களின் சடலங்களையோ காயமடைந்தவர்களையோ பாதுகாப்புக் காரணங்களுக்காக கொண்டு செல்லப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இக்கட்டுரை எழுதும்போது நூற்றுக்கணக்கான காயமடைந்த படையினர் பலாலி , வவுனியா, அனுராதபுரம், பொலனறுவை, திருகோணமலை மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என இராணுவ உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அத்துடன் கடந்த 16மற்றும் 17ஆம் திகதிகளில் கிளிநொச்சி, யாழ் .களமுனைகளில் இடம்பெற்ற கடும் மோதல்களில் 145 படையினர் கொல்லப்பட்டதுடன் 300 படையினர் காயமடைந்ததாகவும் இதில் 42 படையினர் களமுனைக்கு திரும்ப முடியாதவாறு காயமடைந்ததாகவும் இராணுவத்தகவல் முகவர் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.

கிளாலி கிளிநொச்சி களமுனைகளில் விடுதலைப்புலிகளின் சாள்ஸ் அன்ரனி, ஜெயந்தன், இம்ரான் பாண்டியன் சிறப்புப்படையணி, சோதியா மற்றும் மாலதி சிறப்புப்படையணி , கிட்டு ஆட்லறிபிரிவு , குட்டிசிறி மோட்டார் பிரிவு பொன்னம்மான் பொறிவெடிப்பிரிவு மற்றும் சினைப்பர் பிரிவு ஆகிய பெரும் படையணிகள் படையினருக்கு எதிர்ப்புகள் வழங்கி வருகின்றது.

இதில் வடபோர்முனைத் தளபதியாக கேணல் லோறன்ஸும் கிளிநொச்சி களமுனைகளின் தளபதிகளாக கேணல் லக்ஷ்மனும் லெப். கேணல் வேலவனும் வழி நடத்துகின்றனர்.

இந்த சிறப்புப்படையணிகளின் முழுக்கட்டுப்பாட்டையும் கட்டளையிடும் பொறுப்பும் கேணல் தீபன் கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மற்றும் வடபோர் முனைகளின் (யாழ். குடாநாட்டு களமுனைகள்), கூட்டுக்கட்டளைத்தளபதியாக கேணல் தீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது கிளிநொச்சி வடபோர் முனைகளின் போர் வியூகங்களை மேற்கொள்ளவும் தாக்குதல்களைத் தொடுக்க கட்டளையிடவும் கேணல் தீபனுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

**யாழவன்**

போவது சரியான பாதையாக இல்லாதபோது வேகமாக ஓடுவதால் என்ன பயன்?

– ஜேர்மன்

வலம்புரி

## யாழ்.நகர வாகன நெருக்கடி தீர்க்கும்வழி குறித்து ஆராய வேண்டும்

யாழ்ப்பாண நகரத்தில் மிகப்பெரும் வாகன நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எந்நேரமும் விபத்துக்கள் இடம்பெறலாம் என்ற ஆபத்திலேயே யாழ்ப்பாண நகரத்தில் வாகனப் போக்குவரத்து உள்ளது.

இது தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் இது பற்றிப் பிரஸ்தாபித்திருந்தோம்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள வாகன நெருக்கடியில் படைத்தரப்பினால் ஆரியகுளம் –வேம்படி வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி என்பன பொது மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டமை ஓரளவுக்கேனும் வாகன நெருக்கடியைக் குறைப்பதற்கு உதவி செய்துள்ளதெனலாம்.

அதேநேரம் யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள வாகன அதிகரிப்பிலும், வீதிகளின் ஒடுக்கத்திலும், வீதி நடைமுறைகளைப் பின்பற்றுவதிலும் இருக்கக் கூடிய பிறழ்விலும் வாகனப் போக்குவரத்து மிகவும் நெருக்கடி நிறைந்ததாக –ஆபத்தானதாக இருக்கின்றது.

எனவே இது தொடர்பில் உடனடியாக உரிய அதிகாரிகள் மற்றும் போக்குவரத்துப் பொலிஸார் கூடி ஆராயவேண்டும்.

யாழ். குடாநாட்டுக்கான உணவுப் பொருட்கள் கப்பல் மூலமாக எடுத்துவரப்படுவதால் யாழ்.நகரில் லொறிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மக்கள் நடமாடும் நேரங்களில் கனரக வாகனங்களின் போக்குவரத்தும் இருப்பது அவ்வளவு நல்லதல்ல.

முன்னைய காலங்களில் கனரக வாகனங்களில் பொருட்கள் ஏற்றி இறக்கவில்லையா? என்றொரு கேள்வி எழுமாயின் அப்போதெல்லாம் ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத காரணத்தினால் இரவு வேளைகளில் வர்த்தக நிலையங்களிற்கான பொருட்களை ஏற்றி இறக்கும் பணி நடைபெற்றுக் கொள்ளும்.

இரவு வேளையில் இப்பணி இடம்பெறுவதால் பகலில் பொது மக்களின் பயணங்கள் இலகுவானதாகவும், சுலபமானதாகவும் நடந்தேறியது.

ஆனால் இப்போதெல்லாம் இரவுப் பொழுதை ஊரடங்குச் சட்டம் காவுகொள்ள பகல் வேளையில் லொறிகளில் பொருட்கள் ஏற்றும் –இறக்கும் வேலைகள் மும்முரமாக நடக்கின்றது.

இதற்கு மேலாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள நடைபாதை வியாபாரம் பாதசாரிகளின் இடத்தை ஆக்கிரமித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபை எடுத்த நடவடிக்கைகள் எதுவுமே பலனளிக்கவில்லை.

எனவே இவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இதற்காக விசேட மாநாடொன்றை பொறுப்பான அதிகாரிகள் கூட்டி நிலைமையை ஆராய வேண்டும்.

இல்லையேல் மிக மோசமான விபத்துக்களையும், அதனால் உயிராபத்துக்களையும் சந்திக்கும் அவல நிலைக்கு யாழ்.நகரப் போக்குவரத்து மக்களை ஆளாக்கும்.

# சிவத் தமிழ் அன்னையின் 84ஆவது பிறந்த நாள் விழா

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, அவர்களின் 84 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவும் சிவத்தமிழ்ச் செல்வி நினைவாலயம் திறப்பு விழாவும் எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினைக் காலை 8.30 மணிக்கு அமெரிக்கா ஹைவாய் சைவ அதீன ஆன்மீக அன்பர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் சிவத்தமிழ் செல்வி நினைவாலயத்தை திறந்து வைக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து சிவாச்சாரியப் பெருந்தகைகளின் ஆசீர்வாதம் இடம்பெறும்.

தொடர்ந்து கொழும்பு அகில இலங்கை இந்துமாமன்ற கௌரவ பொதுச்செயலாளர் கந்தையா நீலகண்டன் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் திருவுருவச் சிலையினையும் அகில இலங்கை இந்துமாமன்ற தலைவர் வி. கயிலாசபிள்ளை சிறுவர் பூங்காவையும் திறந்து வைக்கவுள்ளனர்.

அடுத்து சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் மற்றும் ஹவாய் சைவ ஆதீன ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோரின் பிரார்த்தனை உரையும் இடம்பெறும் தொடர்ந்து அன்னை யின் பிறந்தநாள் அறக்கொடை வழங்கும் நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை தீவிர கிசிச்சைப் பிரிவுக்கும் யாழ். கல்வி வலயத்தில் உச்சத் திறமையும் வறுமையும் உடைய மாணவர்களுக்கும் அன்பளிப்புகள் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் யாழ் அரச அதிபர் க. கணேஷ் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் நா. சண்முகலிங்கன், அகில இலங்கை இந்துமாமன்ற தலைவர் வி.கயிலாசபிள்ளை, தெல்லிப்பளை பிரதேச செயலர் சு.முரளிதரன் ஆகியோர் நினைவு உரையாற்றவுள்ளனர். (ஓ-4)

# ஈழத்தமிழ் அகதிகளுக்கு தமிழகத்தில் புதிய வீடுகள்

தமிழகத்தின் நாரனாமால்புரம் அகதி முகாமில் தங்கவைக் கப்பட்டிருக்கும் 208 இலங்கைக் குடும்பங்களில் 96 குடும் பங்களுக்குப் புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

150ஆண்டுகள் பழமைவாய்ந்த முகாம்களில் தங்கியிருந்த இவர்களுக்கு கத்தோலிக்க புனர்வாழ்வு சேவைகள் எனும் அமைப்பு திருநெல்வேலி-மதுரை பிரதான வீதிக்கு அண்மையிலுள்ள கங்கைகோடன் எனும் பகுதியில் 1.15 கோடி ரூபா செலவில் புதிய வீடுகள் அமைத்துக்கொடுத்துள்ளது.

2007ஆம் ஆண்டு இறுதியில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தமிழக முகாம்களுக்கு விஜயம் செய்தபோது நடந்த சந்திப்புக்களில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே இந்த வீடுகள் அமைத்துக்கொடுக்கப் பட்டுள்ளன. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் நாரனாமால் புரத்தில் அமைக்கப்பட்டிருந்த வெடிபொருள் களஞ்சியமாகவிருந்த கட்டடமொன்றிலேயே இலங்கைத் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

இவர்களுக்குத் தனியான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு 20 ஏக்கர் நிலம் இனம் காணப்பட்டிருந்தது. ஒவ்வொரு வீடும் 200சதுர அடியைக் கொண்டமைந்திருப்பதுடன் வரவேற்பறை, சமையலறை, மலசலகூடம் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளன.

நீர்வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருப்பதுடன் விளையாட்டு மைதானம், உலருணவுக் கடைகள் போன்ற னவும் அந்தக் குடியிருப்புக்களுக்கு அண்மையிலேயே

அமைத்துக்கொடுக்கப்பட்டிருப்பதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எஞ்சிய 112 குடும்பங்களுக்குமான வீடுகள் அமைத்துக் கொடுப்பது பற்றி ஆராய்ந்து வருவதாக கத்தோலிக்க புனர்வாழ்வு சேவைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு மத்திய அரசாங்கம் ஏற்கனவே 17 கோடி ரூபாவை ஒதுக்கியிருப்பதாக தமிழக அமைச்சர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ)

## இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மாபெரும் விற்பனை மேம்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் நடத்தும் மாபெரும் விற்பனை மேம்படுத்தல் நிகழ்வு மக் கொஸ்ற் கட்டர் சுப்பர் மார்க்கெற்றில் இம்மாதம் 18 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வாடிக்கையாளர் மத்தியில் காப்புறுதியின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தும் நோக்கில் நடைபெறும் இந்நிகழ்வில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் ஏற்கனவே காப்புறுதி திட்டத்தில் இணைந்து ஐந்து வருடங்களுக்குள் காலாவதியான காப்புறுதி திட்டங்களை புதுப்பித்தக் கொள்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பும் நடைபெறவுள்ளது.

அத்துடன், ஒரு மாதகாலப்பகுதியில் காப்புறுதி செய்து கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த கட்டுப்பணத்தில் கூடிய காப்புறுதி தொகையினை வழங்கும் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அதிகூடிய பங்கு இலாபத்தினையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கவுள்ளதாக இலங்கைகாப்புறுதி கூட்டுத்தாபன ஆயுள் காப்புறு, விற்பனை முகாமையாளர் அ. ரஞ்சித் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## இலங்கையில் தமிழர் படுகொலையை தடுக்கவே குரல் கொடுத்தோம்

## இயக்குநர் சீமான்

விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசியதாக கூறப்பட்ட புகாரின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இயக்குநர் சீமான், கொளத்தூர் மணி ஆகியோர் ஈரோடு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். அப்போது இயக்குநர் சீமான் கூறியதாவது,

இலங்கையில் தமிழர்கள் தினமும் படுகொலை செய்யப் பட்டு வருகிறார்கள். அதை தடுக்க முடியவில்லை. ஈழத்தமிழர் படுகொலையை தடுக்க குரல் கொடுத்த எங்களை கைது செய்து இருக்கிறார்கள் என்றார்.

இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசினீர்களா? என்று கேட்பதற்கு, இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசவில்லை. ராஜீவ்காந்தி கொலையை நியாயப்படுத்தியும் பேசவில்லை என்றார்.

கொளத்தூர் மணி கூறும் போது, பேச்சு உரிமை எல்லாருக்கும் உண்டு. விடுதலைப்புலிகளை எதிர்க்க காங்கிரஸ் காரர்களுக்கு உரிமை இருப்பது போல, அவர்களை ஆதரிக்க எங்களுக்கும் உரிமை உண்டு என்றார். (ஓ-6)

# இறை சந்திப்பு

இது சந்திப்பின் காலம் – இறைவன் நம்மைத்தேடி வந்து சந்திக்கின்ற காலம். அதுவே கிறிஸ்து பிறப்பு காலம். நாம் அவரை எவ்வாறு சந்திக்கப் போகின்றோம்? சந்திப்பு நிகழாவிட்டால் பல சாதனைகள் பிறப்பது எப்படி? இறைவன் இன்றும் நம்மை பல வழிகளில் சந்திக்க வந்து கொண்டிருக்கிறார். அன்றாட நிகழ்வுகள், மனிதர்கள், இயற்கை

பரம்பிதா காட்டிய பாதை

மாற்றங்கள், இவைகளெல்லாம் இறை மனித சந்திப்பின் வெளியடையாளங்கள். இந்த சந்திப்புகள் காலத்தின் அறிகுறிகள், காலத்தின் கட்டாயங்கள். ஒரே வகை சந்திப்பு ஒரு சிலருக்கு ஆக்கத்தையும், வேறு சிலருக்கு அழிவையும் ஏற்படுத் தியிருக்கின்றது. வரலாற்றிலே அசோக மன்னன் கலிங்கத்துப் போரை சந்தித்தான்; மனம் மாறினான்; அதனால் புத்த மதம் பரவியது. 20 ஆம் நூற்றாண்டு இரண்டாம் உலகப் போரைச் சந்தித்து மாபெரும் அழிவைக் கண்டது. மீட்பு வரலாற்றிலும் இயேசு பிறப்பை இடையர்களும் ஞானிகளும் சந்தித்தனர்.



இறைவெளிப்பாட்டைக் கண்டனர். ஆனால் ஏரோது மன்னன் இயேசு பிறப்பைச் சந்தித்தான். அழிவு ஏற்பட்டது.

எனவே, இன்று இயேசுவின் பிறப்பு நமக்கும் ஒரு சந்திப்பை ஏற்படுத்த வேண்டும். நாம் அவரைச் சந்திக்க வேண்டும் என்றால் மரியாவைப் போன்று நம்மையே அடிமையாக்க வேண்டும்; இடை யர்கள் ஞானிகளைப் போல நம்மையே வெறுமையாக்க வேண்டும். ஆனால் ஏரோது மன்னனைப் போன்று ஆணவமும், அகங்காரமும் கொண்டு வாழ்ந்தால் அழிவைத்தான் சந்திப்போம்.

இன்று சமுதாயத்தில் பரட்டைத் தலையுடன், குழி விழுந்த கன்னங்களுடன், ஒட்டிய வயிற்றுடன் நடைபாதையின் மூலையில் முடங்கிக் கொண்டிருக்கின்ற முகவரி இல்லாத மனிதர்கள் தான் அந்த எழுதப்படாத புத்தகங்கள் தலையிலே பொதியையும், தோளிலே சுமையையும், கையிலே சம்மட்டியையும், காலிலே ரிக்ஷாவையும் தாங்கியிருக்கின்ற இவர்கள் தான் சமுதாயத்தில் எழுதப்படாத புத்தகங்கள்; வரையப்படாத ஓவியங்கள் இவர்கள் வழியாகத்தான் இறைவன் நம்மை இன்று சந்திக்க வருகின்றார்.

ஜோன் ரொபேர்ட்



# Lifeline
# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

## குடும்ப வன்முறைகளினால் சிதையும் சிறுவர்களின் எதிர்காலம்

முகாம்களில் அதிகமான பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடைபெற்று வருகின்றன. கணவர் தினமும் குடித்துவிட்டு வந்து மனைவிமாரையும் குழந்தைகளையும் துன்புறுத்துவர். இதனால் தாய்மாரும் குழந்தைகளும் அதிகமான துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என்று கருத்துக் கூறும் சிந்துஜா வவுனியா சிதம்பரபுரம் சிறி நாகராஜா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 14 வயதுடைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கில் காணப்பட்ட அசாதாரண சூழ்



நிலைகளினால் வவுனியாவுக்கு இடம்பெயர்ந்த இவர் தற்போது சிதம்பரபுரத்தில் அமைந்துள்ள முகாமில் வசித்து வருகின்றார்.

உலகில் எங்குபார்த்தாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்த வண்ணமே உள்ளன. அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படுவதில்லை. துன்புறுத்தப்படும் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாக்கப்படுவதுடன் அடிமைகளாகவும் வைக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் அமைப்புகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பால் நிலைப்படுத்தப்பட்ட வன்முறைகளுக்கு எதிரான கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தகவலின் படி இலங்கையில் 60 சதவீதமான பெண்கள் குடும்ப வன்முறைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் ஒரு விடயமாக எங்களால் முடியும் (We can) என்ற பிரசார நடவடிக்கையின் மூலமாக பல்வேறு பிரதேசங்களில் விழிப்புணர்வு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக மட்டக்களப்பில் பெண்கள் தேவைகளுக்காக பரிந்துரை செய்யும் வலையமைப்பின் ஊழியர் தாரணி சிறிதரன் தெரிவிக்கையில்,

முகாம்கள் மற்றும் மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று இந்தப்பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் இதன் காரணமாக ஆண்கள் பலர் தமது செயற்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். இலங்கையைப் பொறுத்தவரையில் ஏனையப் பிரதேசங்களைவிடவும் முகாம்களிலும் மீள்குடியேற்ற பிரதேசங்களிலும் வாழும் பெண்கள் அதிகளவில் வன் முறைகளுக்கு ஆளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்குக் காரணம் முகாம்களில் காணப்படும்பாதுகாப்பற்றதன்மை, மதுபாவனை மற்றும் முகாம்களில்,நெருக்கமாக வாழ்கின்றமை என்று கூறப்பட்டபோதிலும் ஆரம்பக் காலம் தொட்டு இலங்கை போன்ற நாடுகளில் காணப்படும் கலாசாரப் பின்னணியும் பெரும் பங்கு வகிக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

விழிப்புணர்வு நடவடிக்கைகளின் பின்னர் மாற்றுனராக இனங்காணப்பட்ட பத்மநாபன் கலாவதி தெரிவிக்கையில், நான் திருமணம் செய்த நாளிலிருந்தே என் கணவரிடம் பல துன்பங்களை அனுபவித்தேன்.தினமும் அடிப்பதும் உதைப்பதும் தான். அப்போதெல்லாம் நான் இது வன்முறையென்று அறிந்திருக்கவில்லை. எங்கள் குடும்பங்களிலும் நடந்துள்ளது. வெளியிலும் இவ்வாறான செயற்பாடுகளை நான் கண்டுள்ளேன்.

எனவே எல்லாக்குடும்பங்களிலும் இவ்வாறு தான் நடக்கும் என்று நினைத்தேன். விழிப்புணர்வு செய்யப்படும் முன்னர் இது வன்முறை என்றே நான் நினைக்கவில்லை என்றார். இவரைப்போன்று தான் பெரும்பாலான பெண்கள் தமக்கு நடப்பது வன்முறை என்று கூட அறிந்திருப்பதில்லை. வவுனியா பெண்கள் அபிவிருத்தி அமைப்பினால் பாடசாலை மட்டங்களிலும் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாடகங்கள், சுவரொட்டிகள் என்பன மூலமாக இந்த விழிப்புணர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.2004ஆம் ஆண்டு தொடக்கம் நடத்தப்பட்டு வரும் இந்த விழிப்புணர்வில் ஆண்களையும் உள்வாங்கி செயற்பட்டு வருவதாக வவுனியாப்பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் சுலோஜினி விஸ்வலிங்கம் தெரிவித்தார்.




குடும்பங்களில் நிலவும் வன்முறைகளினால் பிள்ளைகளது கல்வி மற்றும் எதிர் காலம் பாதிக்கப்படுகின்றன. குடும்பத்தில்

**ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு பால் நிலைப்படுத்தப்பட்ட வன்முறைகளுக்கு எதிரான கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தகவலின் படி இலங்கையில் 60 சதவீதமான பெண்கள் குடும்ப வன்முறைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

மனைவிக்கு எதிராக வன்முறையில் ஈடுபடும் ஒவ்வொரு ஆணும் தனது பிள்ளைகளது வாழ்க்கையை கேள்விக்குறியாக்குகின்றனர் என்கின்றார் தரணிக்குளத்தைச் சேர்ந்த நவரட்ணம் எட்வின்.

## உங்கள் வாகனம் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

இல்லையெனில் உடனே உங்கள் வாணங்களை உங்களது பெயரில் பதிவு செய்து கொள்வதன் மூலம் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

முறையாகப் பதிவு மேற்கொள்ளப்படாத வாகங்களை செலுத்துவது சட்டப்படி குற்றமாகும்.

***வாகனங்களைப் பதிவு செய்ய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?***

உங்களது பிரதேச செயலகத்தில் உள்ள வாகனப் பதிவுக்கான காரியாலயத்தை அணுகி மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## சுவடுகள்

♦ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 155 ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 16ஆயிரத்து 971 குடும்பங்களைச் சேர்ந்த 57ஆயிரத்து 425 பேர் (வன்னி நீங்கலாக) அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

♦ வன்னியிலிருந்து தமது அத்தியாவசிய தேவைகளுக்காக வவுனியாவிற்கு வந்திருக்கின்ற மக்கள் வன்னிக்கு செல்வதற்கும், வன்னியில் இருக்கின்ற மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை மேற்கொள்வதற்கு வவுனியா செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சார்ள்ஸ் தெரிவித்திருக்கின்றார். போக்குவரத்திற்கென பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற இரண்டு பேரூந்துகளில் இப்பிரயாணத்தினை மெற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

♦ வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிற்கு வந்திருக்கின்ற மக்களில் 15 மாணவர்கள் தற்போது நடைபெற்று வருகின்ற பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு முகங்கொடுத்திருப்பதாகவும் அவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்திருப்பதாகவும் வவுனியா மாவட்ட அரசாங்க செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத்தருகிறோம். வடக்கு கிழக்குப்பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு அவர்களுக்கான உரிமைகள் பற்றி எடுத்துக்கூறும் வகையில் ***மனித உரிமைகள்*** குறுநாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

## மனித உரிமைகள்

மீண்டும் வாழ்வோம் நிகழச்சியில் உங்கள் கதைகள் குறுநாடகப்பகுதியில் டிசம்பர் 10 ஆம் திக்தி சர்வதேச ரீதியாக முன்னெடுக்கப்பட்ட மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மனித உரிமைகள் என்ற குறுநாடகம் ஒலிபரப்பானது.

1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதியை சர்வதேச மனித உரிமைகள் தினமாக ஐ.நா. சபை பிரகடனப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய உரிமைகளைப் பாதுகாத்து அவர்களை கௌரவமாகவும் சுதந்திரமாகவும் செயற்பட வைப்பதற்காகவும் மனித உரிமை மீறல்க்ள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனப்தற்காகவும் இந்த தினத்தை பிரகடனப்படுத்தினார்கள்.

60 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள மனித உரி



மைகள் தினத்தின் இந்த வருடத்திற்கான தொனிப்பொருள் எங்கள் எல்லோருக்குமான கௌரவமும் நீதியும் என்பதாகும். மனித உரிமைகள் என்றால் மனிதனாகப்பிறக்கின்ற ஒவ்வொருவருக்கும் உரிய சமத்துவமானதும் விட்டுக் கொடுக்க முடியாததுமான உரிமைகள். இந்த உரிமைகளில் முக்கியமானது அவர்களுக்குரிய அடிப்படை உரிமைகள். ஒவ்வொரு மனிதனும் தனது கலாசாரம், மொழி, மதம் இவற்றை பின்பற்றி கௌரவத்துடனும், நீதியுடனும் வாழ்வதற்குரிய உரிமைகளை நாம் அடிப்படை உரிமைகள் என்று கூறலாம். மனித உரிமைகள் என்ற கூற்றிற்குள் உள்ளடங்கியிருக்கும் மற்றைய உரிமைகள் பற்றி நாம் நோக்கும் போது சிறுவர் உரிமை, பெண் உரிமை, தொழிலாளர்களுக்கான உரிமைகள், சமூகத்தில் இருந்து விலக்கிப்பட்டவர்களுக்கான உரிமைகள், அங்கவீனர்களுக்கான உரிமைகள், நோய் ரீதியாக விலக்கி வைக்கப்பட்டவர்களுக்கான உரிமைகள், கலாசாரரீதியான உரிமைகள், அரசியல் ரீதியான உரிமைகள், பொருளாதார ரீதியான உரிமைகள் போன்றவற்றைக் கூறலாம்.

மனிதனுக்காகவுள்ள உரிமைகளுக்கு மனிதனால் அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மனித உரிமை மீறல்கள் ஏற்படுகின்றது. முக்கியமாக ஒருவரை இன்னொருவர் அடிமைப்படுத்த முனையும் சந்தர்ப்பங்களைக் கூறலாம். மொழி, இனம், கலாசாரம், தொழில், சாதி போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருவரை மற்றவர் அவமானப்படுத்துதல், அடிமைப்படுத்துதல் சித்திரவதை செய்தல், கொலை செய்தல் இப்படியான செயல்கள் சர்வதேசரீதியாக மனித உரிமை மீறல்களாகக் கருதப்படுகிறது.

மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் சர்தேச மனித உரிமை அமைப்பின் கீழ் ஒவ்வொரு நாடுகளிலும் மனித உரிமை அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த அமைப்புகள் மூலம் மக்களுக்கு மனித உரிமை மீறல்கள் தொடர்பான விழிப்புணர்வுகள் வழங்கப்படுகின்றன. ஊடகங்கள் மூலமான மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகள் வெளியாகின்றன. மனிதனுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் உரிமை மீறல்களில் ஈடுபடுத்துபவர்களுக்கு எதிராக சர்வதேச ரீதியாக சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. எழுத்துருவில் உள்ள மனித உரிமைகளை செயற்பாட்டு வடிவத்திற்குக்கொண்டுவந்து அவற்றைப் பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய கடமையாகும்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள் இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளை ஒலிபரப்பக் காத்திருக்கிறோம். உங்கள்கதைகள் மற்றவர்களுக்கு படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமைகளில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநூர் எவ்.எம் ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews.lk.Radio.Voices of peace.lk) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

## மீண்டும் வாழ்வோம்

"மீண்டும் வாழ்வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

## உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

**மீண்டும் வாழ்வோம்**

தொடர்பான உங்கள் மேலான எண்ணங்களையும் படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம். நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில் உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள். அவற்றை மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே. 0774952242

# இந்தியா முதலாவது இன்னிங்ஸில் 453 ஓட்டங்களைக் குவித்தது

## டிராவிட் 26ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்



(மொகாலி)

காம்பீர்–டிராவிட் ஜோடியின் 314 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 453 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட்டில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் மொகாலியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 179 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு காம்பீர்–டிராவிட் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது.

ஆரம்பத்தில் நிதானமாக ஆடிய டிராவிட் நேற்று சிறப்பாக துடுப்பெடுத்தாடி வேகமாக ஓட்டங்களைக் குவித்தார்.

மறுமுனையில் காம்பீரும் சிறப்பாக ஓட்டங்களைக் குவிக்க இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

இதில் ராகுல் டிராவிட் தனது 26ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்திசெய்து அசத்த இந்திய அணி 250 ஓட்டங்களை கடந்தது.

இந்த ஜோடியின் இணைப்பாட்டத்தை பிரிக்க இங்கிலாந்து அணித்தலைவர் பீற்றர்சன் பல்வேறு வியூகங்களை வகுத்தபோது முடியாமல் போனது.

இதில் ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய காம்பீர் 150 ஓட்டங்களை எடுக்க இந்திய அணி 300 ஓட்டங்களைக் கடந்தது.

இந்நிலையில் இந்திய அணி 320 ஓட்டங்களை எடுத்தபோது காம்பீர் 179 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டெண்டுல்கர் களமிறங்கி நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் சிறப்பாக ஆடிய டிராவிட் 136 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய லக்ஸ்மன் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் டெண்டுல்கர் 11 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து யுவராஜ் சிங் களமிறங்க மறுமுனையில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 24 பந்துகளை எதிர் கொண்டு ஒரு ஓட்டத்தைகூட ஆரம்பிக்காமல் ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து 19 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களையிழந்த இந்திய அணி 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த யுவராஜ் சிங்–தோனி ஜோடி நம்பிக்கை அளித்தனர்.



இந்த ஜோடி 40 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது யுவராஜ் சிங் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து தோனியுடன் இணைந்த ஹர்பஜன் சிங் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க இந்திய அணி 400 ஓட்டங்களைக் கடந்தது.

இந்நிலையில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களையிழந்து 418 ஓட்டங்களை எடுத்த போது அணித்தலைவர் தோனி 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து சகீர்கான் களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஹர்ப்பஜன் சிங் 21 பந்துகளில் (2 பவுன்டரி,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மிஷ்ரா சிறப்பாக ஆட மறுமுனையில்சகீர்கான் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து இஷாந்த் சர்மா களமிறங்க மறுமனையில் மிர்ஷா 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 453 ஓட்டங்களை எடுத்தது. இஷாந்த் சர்மா ஆட்டமிழக்காமல் ஒரு ஓட்டத்தை எடுத்தார்.

பந்துவீச்சில் பிளின்டொப்,ஸ்வான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பனீசர் 2 விக்கெட்டுக்களையும் பிரோட்,அன்டர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேரமுடிவில் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டம் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## சிமித் பெறுமதியான சதம்; தென்னாபிரிக்கா ஆதிக்கம்

அணித்தலைவர் சிமித்தின் அபார சதத்தின் மூலம் முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 227 ஓட்டங்களை எடுத்திருந்தது.

முன்னதாக தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 319 ஓட்டங்களை எடுத்து தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக 414 ஓட்டங்களை நிர்ணயித்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட், 2 இருபது–20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 17ஆம் திகதி பேர்த்தில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது 375 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 281 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 94 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள்ஆட்டநேரமுடிவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 228 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஹடினின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் தனது இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 319 ஓட்டங்களை எடுத்து தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக 414 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதில் ஹடின் 94 ஓட்டங்களையும் ஹடிச், சைமண்ட்ஸ் ஆகியோர் தலா 37 ஓட்டங்களையும் பொன்டிங்,கிரஜ்ஜா ஆகியோர் தலா 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹரிஸ்,கலிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் நிற்னி,மோர்கல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 414 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, அணித்தலைவர் சிமித்தின் சிறப்பான சதத்தின் மூலம் நேற்யை நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்தது 227 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் சிமித் 108 ஓட்டங்களையும் அம்லா 53 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்ததுடன் கலிஸ் 33,டி வில்லியர்ஸ் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் ஜோன்ஸன் 2 விக்கெட்டுக்களையும் பிரெட் லீ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஐந்தாவதும் இறுதி நாளான இன்று தென்னாப்பிரிக்க அணி 7 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 187 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி பெறமுடியும். பொறுத்திருந்து பார்ப்போம் தென்னாபிரிக்க அணியின் வெற்றி கனவு நனவாகுமா என்று.

## நியூசிலாந்து அணி சிறப்பான ஆரம்பம்

பிளைனின் சிறப்பான அரைசதத்தின் மூலம் நியூசிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களையிழந்து 145 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள மேற்கிந்தியதீவுகள் அணி இரண்டு டெஸ்ட்,இரண்டு இருபது–20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் டுடினிடில் நடந்த முதல் டெஸ்ட் சமனிலையில் முடிந்தது. இந்நிலையில் இவ்விரு அணிகளும்நேபியரில் இரண்டாவது டெஸ்டில் விளையாடுகின்றன. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இரண்டாம் நாளான நேற்று ஆட்டத்தை தொடர்ந்த மேற்கிந்திய தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 307 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் பொறுப்புடன் ஆடிய சந்தர்போல் கடைசிவரை ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களை எடுத்தார். நியூசிலாந்து சார்பில் ஓ பிரின் 6 விக்கெட்டுக்களையும் டானியல் விட்டோரி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதல்இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 145 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பிளைன் 57 ஓட்டங்களை எடுத்திருந்தார். மெக்கின்ரோஸ் 62,ரோஸ் ரெய்லர் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார். மேற்கிந்தியதீவுகள் அணி சார்பில் எட்வோட்ஸ் 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

## இலங்கை அணி பாகிஸ்தான் செல்கிறது


பாகிஸ்தானுக்குச் செல்ல இந்தியா மறுத்துவிட்டதையடுத்து இலங்கை அணி பாகிஸ்தான் செல்லவுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரிமாதம் இந்திய அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் செல்ல திட்டமிட்டிருந்தது. ஆனால் இந்திய அரசு இந்தப் பயணத்திற்கு அனுமதியளிக்க வில்லை. மும்பை தீவிரவாதத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளே காரணம் என தெரிய வந்ததையடுத்து இந்த சுற்றுப் பயணத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனை ஏற்று இந்திய கிரிக்கட் சபையும் பாகிஸ்தான் கிரிக்கட் பயணத்தை ரத்து செய்வதாக அறிவித்தது.

இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்தால் அதற்கு பதிலாக தாங்கள் பாகிஸ்தான் செல்ல தயாராக இருப்பதாக இலங்கை தெரிவித்து இருந்தது. இதனை பாகிஸ்தான் கிரிக்கட் சபையும் உறுதிப்படுத்தியுள்ளது.

# அரசியல் மோதல்களுக்காக நீதிமன்றத்தை பயன்படுத்துகின்றனர்

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் மோதல்களுக்காக நீதிமன்றங்களைப் படுத்துகின்றனர். எரிபொருள் விலைக் குறைப்பு தொடர்பான உயர் நீதிமன்ற உத்தரவு கட்சி மற்றும் நிறபேதங்களுக்கு அப்பாற்பட்டதாகும். எரிபொருள் பிரச்சினையை நாட்டின் தேசியப் பிரச்சினையாகக் கருதியே நீதியரசர்கள் குழு குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

பொதுமக்கள் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக காலை முதல் நீண்ட வரிசையில் நிற்கின்றமை கவலையளிக்கும் விடயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை நீதிமன்ற சேவை அதிகாரிகள் சங்கத்தின் மாநாட்டில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதம நீதியரசர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் பின்னரும் வியாழக்கிழமை காலை முதல் அதிகளவான மக்கள் எரிபொருளுக்காக காத்து நின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

இந்நிலைமைக்கு ஒரு வகையில் நானும் பொறுப்புக் கூற வேண்டுமென உணர்கிறேன். ஆனால் நீதிமன்றத்தில் கட்சி, நிற பேதங்களை தாண்டியே அனைத்து தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றது என்பதை கூற வேண்டியுள்ளது.

இது தேசிய பிரச்சினை அதனால்தான் உயர் நீதிமன்றம் நான்கு தடைவைகள் உத்தரவு பிறப்பித்தது. இதனை கட்சி அல்லது அரசியல் கோணத்தில் பார்க்க வேண்டாம் என நவம்பர் மாதம் 28ஆம் திகதி வழங்கிய தீர்ப்பில் வலியுறுத்தி கூறியிருந்தோம். நீதியரசர்கள் குழுவில் இருந்த மூன்று நீதியரசர்களும் இதில் கையொப்பமிட்டனர்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அரசியல் மோதல்களுக்கு நீதிமன்றத்தை பயன்படுத்தியுள்ளனர். இந்த அரசியல் கருத்து மோதல்கள் நாட்டை ஊழல் நிலைமைக்கு தள்ளும். அனைத்து கட்சிகளையும் அரசியலையும் விட உயர்ந்த இடத்தில் நாங்கள் இருக்கின்றோம் என்பதை தெளிவாக கூற விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார். (ச-5)

## நாட்டின் நிர்வாக முடிவுகளை நாடாளுமன்றமே மேற்கொள்ளும்

## அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நிதி நிர்வாக முடிவுகளை மேற்கொள்வது நாடாளுமன்றம் மட்டுமே என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது,

நிதி நிர்வாகம் தொடர்பான அனைத்து முடிவுகளையும் நாடாளுமன்றம் தான் மேற்கொள்ளும் இலங்கையின் இதர அமைப்புக்களுக்கு அதற்கான அதிகாரம் கிடையாது. இது அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அனைத்துலக நடைமுறையாகும்.

பெற்றோல் விலைக் குறைப்பு குறித்த தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பை நாம் மதிக்கிறோம். இது தொடர்பில் அமைச்சரவை முடிபு எடுக்கும்.

வரவு-செலவு திட்டத்தின் மூலம் மேலும் பெற்றோல் விலையை மகிந்த குறைத்தார். எதிர்வரும் ஆண்டின் தொடக்கத்தில் சமையல் எரிவாயுவின் விலை பாரியளவில் குறைக்கப்படும். பால்மாவின் விலையும் மேலும் குறைக்கப்படும் என்றார் அவர்.

இதனிடையே கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய ஐ.தே.க. தலைவர்களில் ஒருவரான ரவி கருணாநாயக்க பெற்றோல், அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைப்புக்கு தலைமை நீதிமன்றத்தை நாடுவதில் தமது கட்சிக்கு தயக்கம் ஏதும் இல்லை என்று கூறினார். மேலும் பால்மாவின் விலைக் குறைப்பும் போதுமானது அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

அதேபோல் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க போரை முன்னிறுத்தி எரிபொருள் மீது பாரிய வரி விதிப்பை மகிந்த அரசு மேற்கொண்டிருப்பதாக கூறினார்.

தலைமை நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அதனை அரசாங்கம் மதிக்காமல் இருந்தால் பொதுமக்கள் எப்படி சட்டத்தை மதிப்பார்கள் என்று கேள்வி எழுப்பிய அனுரகுமார, தலைமை நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய எரிபொருள் விலையைக் குறைக்க வேண்டும் என்றார். (ச-5)

### படையினரால்...

கைவிட்டுப் பின் வாங்கினர்.

இதன் பின்னர் அந்த 2 கிலோ மீற்றர் நீளமான முன்னரண் பகுதி விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது.

இந்தப் பகுதியிலிருந்து படையினரின் உடலங்களும் படையப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடைப்பட்ட களமுனையில் மேலும் பல படையினரின் உடலங்களும் படையப் பொருட்களும் காணப்படுகின்றன.

இந்த தாக்குதலின் போது படையினருக்கு ஒத்துழைப்பாக விமானப்படையின் விமானங்கள் செறிவான தாக்குதலை நடாத்தின என விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். (ச-5)

### எறிகணைத்...

இதேவேளை நேற்று அதிகாலை முதல் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் பல குடிமனைகள் சேதமடைந்துள்ளதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (சு)

### பரா வெளிச்...

மக்களின் வீடுகள் இரண்டும் சேதமாகியுள்ளன. யோகநாதன் மற்றும் கமலலேந்திர ன் ஆகியோரின் வீடுகளே தாக்குதலுக்கு இலக்காகி நாசமாகின.

இதேவேளை மீண்டும் நேற்று காலை 7.15 மணிக்கும் காலை 8.00 மணிக்குமாக இரு தடவைகள் வான்படை குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளன. இதில் ஏற்பட்ட சேத விபரங்கள் வெளியாகவில்லை. (ச-5)

### வன்னியிலுள்ள பொது...

களாக அலைந்து திரிவதையும் அவதானிக்க முடிந்ததாக மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித் தார்.

இதேவேளை வன்னி மக்கள் முன்னொரு போதும் எதிர்நோக்காதளவு அவலங்களை எதிர்கொண்டிருப்பதாக ஆயர் தெரிவித்தார்.

வவுனியா பெரிய கோமரசன்குளம் பகுதியில் புதிதாக புனரமைப்புச் செய்யப்பட்ட பரலோகமாதா தேவாலயத்தினை நேற்று திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியிருந்தார்.

வன்னிப் பகுதியில் தற்போது நடந்து வரும் யுத்தம் காரணமாக சுமார் மூன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட மன்னார் ஆயர், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மோதலில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினரையும் குறைந்தது ஒரு வாரத்திற்காவது போர் நிறுத்தம் செய்யுமாறு தான் உள்ளிட்ட ஆயர்கள் இணைந்து கோரிக்கை விடுத்திருந்ததாகத் தெரிவித்தார்.

எனினும் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது என்பதை ஊடகங்கள் மூலம்தான் அறிந்து கொண்டதாக மன்னார் ஆயர் தனதுரையில் குறிப்பிட்டார்.

மிகவும் பழமையான பெரிய கோமரசன் குளம் தேவாலயம் தற்போது அந்தப் பகுதி மக்களாலும் ஆயரினால் வழங்கப்பட்ட 22 இலட்சம் ரூபாய் நிதியுதவி மற்றும் நன்கொடையாளிகளின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. (ச-5)

### வன்னி, யாழ். களமுனை...

பூநகரி -பரந்தன் வீதி வழியாக கிளிநொச்சி நோக்கியும் 57-வது படையணியின் மற்றைய பிரிகேட் அக்கராயனில் இருந்து வடக்குப் புறமாகவும் இரணைமடு குளம் நோக்கி மற்றொரு அணியும் நகர்வைத் தொடங்கின.

கிளாலி -முகமாலை களமுனையில் 53 மற்றும் 55-வது படையணிகள் நகர்வை மேற்கொண்டன. அங்கு கடும் சமர் மூண்டது.

55-வது படையணி கடுமையான இழப்புக்களைச் சந்தித்தது. இந்த இழப்புக்களால் அவர்களின் திட்டம் கைகூடவில்லை.

கிளிநொச்சி முனையில் விடுதலைப் புலிகள் அலையலையாக வந்து தாக்கினார்கள். எனவே படையினரால் முன் நகர்ந்த பிரதேசங்களை தக்க வைக்க முடியவில்லை.

அதிக இழப்புக்களைத் தொடர்ந்து 53 மற்றும் 55-வது டிவிசன்கள் தந்திரோபாயப் பின் நகர்வுகளை மேற்கொண்டதாக படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்களையும் பல்குழல் வெடிகணைச் செலுத்திகளையும் பயன்படுத்தியிருந்தனர்.

படையினரின் நகர்வுகளுக்கு வன்னியில் தொடர்ந்து பெய்துவரும் அடை மழை, பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றது.

பல பகுதிகளில் படையினர் நீர்தேங்கியுள்ள பகுதிகளினூடாக நகர்வுவை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இம்மோதல்களில் சிங்க றெஜிமென்ட், சிலோன் இலகு காலாட்படை றெஜிமென்ட், கெமுனுவோச், கெமுனு றெஜிமென்ட் போன்ற படைப்பிரிவுகள் பங்குபற்றியிருந்தன.

படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவிப்பதை விட இழப்புகள் அதிகமாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

### இழப்புகளை...

மற்றும் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ தலைமையில் கொ ழும்பில் கடந்த புதன்கிழமை அவசரமாக பாதுகாப்புச் சபை கூட்டப்பட்டது.

முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் பங்கு பற்றிய இந்த மாநாட்டில் களமுனைகளில் படையினரின் இழப்புக்களை குறைப்பது எவ்வாறு என்பது தொடர்பாக மிகவும் தீவிரமாக ஆராயப்பட்டது.

அதனை மேற்கொள்வதற்கு இராணுவ நடவடிக்கைகளின் இணைந்த நடவடிக்கை அவசியம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

### புலிகளின் ஆயுதக்...

கடற்படையின் கரையோர காவலணியினர் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது முல்லைத்தீவு கரையில் இருந்து சுமார் 70 கடல் மைல் தொலைவில் காணப்பட்ட இந்த கப்பலை அவதானித்து படையினர் சென்ற போது அவர்கள் மீது தாக்குதல் நடத்தியபடி அந்தக் கப்பல் வேகமாகத் தப்பியோட முயற்சித்தபோது கடற்படையினர் திருப்பித் தாக்கியதையடுத்து அது பெரிய அளவில் தீப்பற்றி எரிந்ததாகவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்திருக்கின்றார்.

இந்தக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது அதற்கு உதவி புரிவதற்காக வந்த விடுதலைப் புலிகளின் நான்கு தாக்குதல் வேகப் படகுகளையும் கடற்படையினர் தாக்கியழித்துள்ளதாகவும் கடற்படைப் பேச்சாளர் கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வெடிபொருட்களை ஏற்றி வந்த சுமார் 100 அடி நீளமுள்ள கப்பலே இவ்வாறு தாக்கியழிக்கப்பட்டதாகவும் கடற்படைப் பேச்சாளர் குறிப்பிட்டிருக்கிறார்.

எனினும் இது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை. (ச-5)

வாருங்கள்... இலவசம்!!!
விடுதலைப் பெருவிழா
கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின்பிடி, பில்லி சூனியக்கட்டு, பரம்பரை சாபங்கள் ஆகியவற்றிலிருந்து
இயேசு விடுதலை கொடுக்கிறார்....
இடம் - நாற்சதுர சுவிசேஷ சபை, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர்.
நேரம்- வெள்ளி பிற்பகல் 2.00மணிக்கும், சனி, ஞாயிறு 3.00 மணிக்கும்.
காலம்: மார்கழி 19ம், 20ம், 21ம் திகதிகளில். (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில்)
19ம் திகதி (வெள்ளி) பல கலை நிகழ்ச்சிகள் உள்ளடங்கிய ஒளி விழா நிகழ்வு நடைபெறும்.
"வருத்தப்பட்டுப்பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்.11:28)
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர்.

Diploma in English
Spoken with Grammar
Phonetics Practices.
Computer Based Prac
புதிய பிரிவுகள் ஆரம்பம் 24.12.2008 08.00AM
★ Practice
★ Spoken Practices.
★ Letter W
★ Listening
விபரங்களுக்கு நேரில்: 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.